# இலக்கு

வாராந்த மின்னிதழ்

இதழ் : 54 01.12.2019

அனைத்துலக தமிழ் ஊடக மையம்

GLOBAL TAMIL MEDIA CENTRE, USA ilakku2009@gmail.com



## தமிழின அடக்குமுறைகளுக்கு எதிராக மாணவர் சமூகம் என்றும் குரல் கொடுக்கும்

யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய செயலாளர் பபிலராஜ்

## எமக்கான வாழ்வைத் தந்தோரின் வாழ்வு?

சமூகநேயன்





## கோத்தபாயாவுக்கு எதிரான வழக்கை தள்ளி வைப்பேனே தவிர கைவிட மாட்டேன்

றோய் சமாதானம்

சிறப்பு நேர்காணல்

## உலகம் முழுவதும் எழுச்சியுடன் உணர்வுபூர்வமாக நினைவு கூரப்பட்ட மாவீரர் நாள்



கண்ணீரில் நனைந்தது தமிழர்கள் வாழும் தேசங்கள்.

## டிசம்பர் 3 சர்வதேச மாற்றுத் திறனாளிகள் நாள்

## தமிழர் கடலும் தமிழர் அரசியலும்

முனைவர் விஜய் அசோகன்

## மாவீரர் நாள் படங்கள்

# வெள்ளைக் கார் கடத்தல் விவகாரம்

## புதிய அரசை ஆட்டம் காணவைத்துள்ளது

சிறீலங்கா தலைநகர் கொழும்பில் உள்ள சுவிற்சலாந்து துதரகத்தின் நுளைவு அனுமதிப்பிரிவில் பணியாற்றும்



பெண்ணைக் கடத்துவதற்கு மேற்கொண்ட முயற்சி தனது ஆட்சிக் காலத்தில் இரண்டு வாரமே நிறைவு செய்துள்ள கோத்தபாயா ராஜபக்சா தலைமையிலான அரசை ஆட்டம்காண வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஜேர்மனியில் உள்ள சிறீலங்கா தூதுவர் கருணாசேனா கெட்டியாராட்சியை அழைத்துள்ள சுவிஸ் வெளிவிவகார அமைச்சு நாளை (2) தனது கடுமையான செய்தி ஒன்றை வழங்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதேசமயம் பல ஐரேப்பிய நாடுகளும் சுவிஸ் அரசுக்கு ஆதரவாக குரல் கொடுக்க ஆரம்பித்துள்ளன. வெளிவிவகார அமைச்சர் குணவர்த்தனாவை சந்தித்த ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகள் உடனடியான விசாரணை வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர்.

நவம்பர் 25 ஆம் நாள் மாலை 5 மணியளவில் சேனாநாயக்க மாவத்தை பகுதியில் சுவிஸ் தூதரகத்தின் பணியாளர் நடந்து சென்றுகொண்டிருக்கையில் அவரைப் பின்தொடர்ந்த வெள்ளை நிற டொயட்டா காரில் வந்த ஐந்துபேர் கொண்ட குழு பணியாளரை பலவந்தமாக காரில் கடத்திச் சென்றதுடன், கறுப்பு துணியினால் கண்ணையும் கட்டியுள்ளனர்.

பாலியல் ரீதியாகவும் தான் துன்புறுத்தப்பட்டதாக தெரிவித்துள்ள பணியாளர் சிறீலங்கா குற்றப்புலனாய்வு அதிகாரி நிசந்தா சில்வா சுவிஸ் தூதரகத்தின் உதவியுடன் சுவிஸ் இற்கு தப்பிச் செல்வதற்கான நுளைவு அனுமதியை பெறுவதற்கு ஏன் உதவிகளை வழங்கினாய் என்ற கேள்வியை கடத்தியவர்கள் தன்னிடம் மீண்டும் மீண்டும் கேட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த கடத்தல் இடம்பெறுவதற்கு முதல் நாளே சில்வா சிறீலங்காவில் இருந்து வெளியேறியிருந்தார். ஆனால் வெளியேறுவதற்கு இரு நாட்களுக்கு முன்னர் சில்வா தனது கைத்துப்பாக்கி மற்றும் உந்துருளியை கையளித்துள்ளார். ஆனால் அதிகாரிகள் சிறீலங்கா அரசுக்கு அதனை மறைத்துள்ளனர். எனவே இது ஒரு திட்டமிட்ட நடவடிக்கை என்ற அதிர்ச்சியில் சிறீலங்கா அரசு உறைந்துள்ளது.

சில்வா பல முக்கியமாக சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை தன்னுடன் எடுத்துக் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கா படுகொலை வழக்கு, பிரகித் எக்நலிகொட கடத்தல், கெயித் நொயர் மீதான தாக்குதல் மற்றும் சிறீலங்கா படையினர் மேற்கொண்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பானவை என தெரிவிக்கப்படுகின்றது.

கடத்தப்பட்ட பணியாளருக்கு சிறீலங்காவில் பாதுகாப்பு இல்லை என்பதால் அவரை நாட்டைவிட்டு வெளியேற அனுமதிக்குமாறு சுவிஸ் தூதரகம் சிறீலங்கா வெளிவிவகார அமைச்சிடம் கேட்டுள்ளது.

# பிரித்தானியா தொழிற்கட்சித் தலைவருக்கு

## எதிராக கொதித்து எழுந்த சிறீலங்கா ஊடகம்

தானம் செய்வது என்பது தனது வீட்டில் இருந்து ஆரம்பிக்கப்பட வேண்டும். ஆனால் அந்த தகுதி பிரித்தானியாவின் தொழிற்கட்சித் தலைவர் ஜெரமி கோர்பைன் மற்றும் நிழல் நிதி அமைச்சர் ஜோன் மக்டோனெல் ஆகியோருக்கு இல்லை என சிறீலங்காவின் பிரதான வார ஏடு தனது சினத்தை



வெளியிட்டுள்ளது.

மாவீரர் தினமாக இருந்தாலும், வேறு எந்த நிகழ்வாக இருந்தாலும், தொழிற் கட்சித் தலைவர்கள் சிறீலங்கா அரசு மேற் கொண்ட போர்க் குற்றங்கள் தொடர்பான வாதத்தை தொடர்ந்து முன் வைக்கின்றனர்.

சிறீலங்கா படையினர் போர்க் குற்றங்களை மேற்கொண்டனர், அவர்கள் மனித உரிமை மீறல்களை மேற்கொண்டனர், சிறீலங்கா அரசு இனப் படுகொலையை மேற் கொண்டிருந்தது என வாதங்களை கோர்பையினும் ஏனையவர்களும் முன்வைக்கின்றனர்.

ஆனால் அவர்கள் உண்மையாகவே மனித உரிமைகளை மதிப்பவர்களாக இருந்தால் பிரித்தானியா படையினர் மேற்கொண்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும்.

பிரித்தானியா படையினர் போர்க் குற்றங்களில் ஈடுபட்டதற்குரிய ஆதராங்கள் தங்களிடம் உள்ளதாக 11 விசாரணையாளர்கள் தெரிவித்துள்ளதாக பிரித்தானியாவின் பி.பி.சி ஊடகம் அண்மையில் தெரிவித்திருந்தது எனவே சிறீலங்கா படையினர் தொடர்பில் குற்றம் சுமத்துவதற்கு கோபையினுக்கு தகுதியில்லை என சிறீலங்கா ஊடகம் கடுமையாக தொழிற்கட்சித் தலைவரை விமர்சித்துள்ளது.

தமிழ் மக்களுக்கு எதிராக சிறீலங்கா அரசும் அதன் படையினரும் மேற்கொண்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றங்களுக்கு எதிராகவும், பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு ஆதரவாகவும் குரல் கொடுக்கும் தொழிற்கட்சி அரசியல் பிரமுகர்களுக்கு எதிராக கொழும்பு ஊடகம் கடுமையான விமர்சனங்களை முன்வைத்துள்ளது என்பது மாகவம்ச சிந்தனைகளில் இருந்து சிங்கள தேசமோ அதன் ஊடகங்களோ மாறவில்லை என்பதையே காட்டுவதாக தமிழ் ஆய்வாளர் ஒருவர் இலக்கு மின்னிதழுக்கு தெரிவித்துள்ளார்.

# மார்ச்சில் சிறீலங்கா நாடாளுமன்றம் கலைப்பு

## ஏப்பிரலில் பொதுத்தேர்தல்



சிறீலங்காவில் எதிர்வரும் ஏப்பிரல் மாதம் இறுதிப் பகுதியில் அல்லது மே மாதத்தின் ஆரம்பத்தில் பொதுத் தேர்தலை நடத்தலாம் என சிறீலங்காவின் தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய சிறீலங்கா அரச தலைவர் கோத்தபயா ராஜபக்சாவிடம் தெரிவித்துள்ளார்.

இந்தியப் பயணத்திற்கு முன்னர் தேசப் பிரியாவைச் சந்தித்த கோத்தபயா இது தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு பணித்திருந்தார். அதனைத் தொடர்ந்தே விரைவாக பொதுத்தேர்தலை நடத்துவதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் ஏப்பிரல் மாதம் 25 ஆம் நாள் அல்லது மே மாதம் 9 அல்லது 16 ஆம் நாள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மேதினம் 1 ஆம் நாள் இடம்பெறுவதால் மே மாதம் 2 ஆம் நாளில் தேர்தலை நடத்துவது சாத்தியமற்றது என தேசப்பரிய தெரிவித்துள்ளார்.

புதிதாக கடந்த  அரசு கொண்டுவந்த 19 ஆவது திருத்தச்சட்டத்தின் பிரகாரம் நாடாளுமன்றத்தை அரச தலைவர் குறைந்தது நான்கு வருடங்கள் மற்றும் ஆறு மாதங்களின் பின்னரே கலைக்க முடியும். அல்லது அவர் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை நாடாளுமன்றத்தில் கொண்டிருக்க வேண்டும். அதன் மூலம் நம்பிக்கையில்லா தீர்மானத்தைக் கொண்டுவந்து நாடாளுமன்றத்தை கலைக்க முடியும்.

எனவே தற்போதைய நிலையில் மார்ச் 2 ஆம் நாளின் பின்னரே நாடாளுமன்றத்தைக் கலைக்க முடியும் என தெரிவிக்கப்படுகின்றது.

இதனிடையே, எதிர்வரும் பொதுத்தேர்தலில் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் ஒரு பொதுக் கொள்கையின் அடிப்படையில் ஒன்றாக தேர்தலில் நிற்க வேண்டும் எனவும், தமிழ் மக்களின் அரசியல் மற்றும் அடிப்படை உரிமைகள்; தொடர்பான தெளிவான கொள்கையை அவர்கள் முன்வைக்க வேண்டும் எனவும் அரசியல்அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

# எமக்கான வாழ்வைத் தந்தோரின் வாழ்வு?

சமூகநேயன்

உள்ளத்தில் உயர்வலு கொண்டு எமது சுதந்திரமான வாழ்வுக்காகவும் மண் விடுதலைக்காகவும் உறுதியோடு போராடியவர்கள், இன்று மாற்றுத் திறனாளிகளாக எம் மண்ணில் வாழ்ந்து வருகின்றார்கள். முள்ளிவாய்க்கால் வரையும் எமது தேசியத் தலைமை இந்த மாற்றுத் திறனாளிகளுக்கு தம்மால் முடிந்தவரை எல்லா வசதிகளையும் செய்து கொடுத்து உயர் உளவலுவோடு அவர்களை பராமரித்து வந்தனர். வெற்றுப் பேச்சோடு நின்று விடாது உண்மையான மாற்றுத் திறனாளிகளாக அவர்களால் முடிந்த வழியில் தேச விடுதலைப் பணிகளிலும் ஈடுபடுத்தப்பட்டனர்.

முள்ளிவாய்க்காலின் பின்னர் மாற்றுத் திறனாளிகளின் நிலை பலத்த கேள்விக் குறிக்குள்ளானது. சாதாரணமானவர்களின் வாழ்வியல் தேவைகளும் மாற்றுத் திறனாளிகளின் வாழ்வியல்



தேவைகளும் மிகவும் வித்தியாசமானவை. சாதாரணமானவர்களால் அதனை விளங்கிக் கொள்வதும் இன்னொருவரின் வலிகளை புரிந்து கொள்வதும் மிகவும் கடினமானது. அதுவும் எமக்கான கடின உழைப்பில் கழுத்துக்கு கீழும் இடுப்புக்கு கீழும் உணர்வின்றி இயக்கமின்றி வாழ்ந்து வருபவர்களின் வாழ்க்கையையும் வலிகளையும் புரிந்து கொள்வதென்பது இலகுவான காரியமல்ல. அதற்கு எங்களை இன்னொருவரது இடத்தில் வைத்துப் பார்க்கின்ற தன்மையும் பண்பும் மிகமிக அவசியமானது. இந்த உலகத்தில் நடக்கின்ற அத்தனை பிரச்சனைகளுக்கும் அச்சாரமானதும் இந்தப் பார்வையின் குறைபாடே.

படுக்கையில் எஞ்சிய காலத்தை வாழ்வதென்பது மிகுந்த உளவியல் வல்லது. ன் அர்ப்பணிப்பு போராட்டத்தால் புலம் பெயர்ந்து தந்த வாழ்க்கையை வருகின்றோம். வாழ்வைத் நூற்றுக்கணக்கான வாழ்க்கையை பின்பும் நாங்கள் கவனிக்காமல் எந்த விதத்திலும் கடும் ஆகும். மாற்றுத் டிசம்பர் 3 இல் உள்வாங்கிக்



கிடந்த படி தமது விரக்தியோடு வலி மிகுந்தது. தாக்கத்தை தர இப்படியானவர்களி நிறைந்த இலட்சக் கணக்கில் ஏதிலிகளாக இவர்கள் நாங்கள் வாழ்ந்து அந்த வகையில் இந்த தந்தவர்களில் வர்களின் பத்தாண்டுகளின் முழுமையாக இருப்பதென்பது மனித நேயமற்றதும் சாபத்திற்குரியதும் அனைத்துலக திறனாளிகள் நாளான இதனை நாம் சரிவர கொள்வோம்.

இந்த இடைப்பட்ட காலப்பகுதியில் பெரு வியாபாரிகளும் சிறு வியாபாரிகளும் உதவுகின்ற பாணியில் தமது வியாபாரத் தந்திரமான மலின விளம்பரங்களை அரங்கேற்றி வருகின்றனர். வாழ்வாதாரத்திற்காக ஏங்கும் உயரிய கொடையாளிகளின் நாளாந்தத் தேவையை பலவீனமாகப் பார்க்கின்றார்கள். செயல்களோடு மட்டும் நின்றுவிட வேண்டிய பணியை நிழற்படங்களாக்கி உலகப் பரப்பெங்கும் பரவ விடுகின்றார்கள். துரதிஸ்ட வசமாக இந்த இடைவெளியை ஏற்படுத்திக் கொடுத்தவர்களாக இன்று உணர்வாளர்களாகிய நாங்களே இருக்கின்றோம்.

உலகப் பரப்பெங்கும் பரவி வாழும் தமிழீழ உணர்வாளர்களாகிய நாங்கள் ஒன்றுபடாதபடி பார்த்துக் கொள்வதில் இலங்கை அரசு நாசூக்காக பல செயற் திட்டங்களை பல கோடி நிதி ஒதுக்கீட்டோடு மேற்கொண்டு வருகின்றதென்பதை நாம் முழுமையாக விளங்கிக் கொண்டாக வேண்டும். அவர்களின் பிரச்சாரத் தந்திரங்களில் எடுபட்டு செய்ய வேண்டிய வேலைகளை நாம் செய்யாதிருக்க வேண்டுமென்பதே அவர்களது நரித் தந்திரம். இதனைச் சரியாகப் புரிந்து கொண்டு நாம் செய்ய வேண்டிய பணிகளை சரியான வழியில் ஒருங்கிணைத்து சரியான திட்டமிடலோடு நாம் முன்னெடுக்க வேண்டும். அதற்கு முதற் கட்டமாக எமக்கான வாழ்வைத் தந்தவர்களின் வாழ்வை நாம் வளமாக்க வேண்டும்.

## பேரினவாதத்தின் பெரு வெற்றி மனித உரிமையின் படுதோல்வி

சிங்கள பௌத்த பேரினவாதம் முழு அளவிலான தனது வாக்குப் பலத்தை வெளிப்படுத்தி தன்சார்பாக தமிழின அழிப்புகளுக்கு 2009 இல் தலைமையேற்ற ஒருவரையே பத்தாண்டுகளின் பின்னரும் நன்றியோடு தன்தலைவராக மட்டுமல்ல இலங்கைத்தீவின் அரச அதிபராகவும் நிறுவிக் கொண்டுவிட்டது.

இது சிங்கள பௌத்த பேரினவாதத்தின் பெரு வெற்றியாக அமைகிற அதே நேரத்தில் இலங்கையில் மனித உரிமையின் படு தோல்வியாகவும் மாறியுள்ளது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள இந்நிலை மனித உரிமைகளை மீறிவிட்டு இன மத உணர்ச்சிகளைத் தூண்டி அதனை அவற்றின் வெற்றியாகக்காட்டித் தப்பிக்கலாம் என்னும் தவறான அரசியல் போக்கை உலகுக்கு வெளிப்படுத்தி உலகின் மனித உரிமைக்கும் பேராபத்தை ஏற்படுத்தியுள்ளது.

1978 இல் அன்றைய இலங்கை அரச அதிபராக இருந்த ஜே. ஆர் ஜயவர்த்தனா தமிழ்பேசும் மக்களில் தங்காத சிங்களத் தலைமையாக இலங்கை அரச அதிபர் இருக்கவேண்டுமென உருவாக்கிய நிறைவேற்று அதிகாரம் உள்ள அரச அதிபர் முறையும் அந்த அரச அதிபரைத் தேர்ந் தெடுப்பதற்கான தேர்தல் முறைமையும் தமிழ்பேசும் மக்களின் பாராளுமன்றம் வழியான சட்டவாக்க உரிமையையும் அமைச்சரவை வழியான நிர்வாக உரிமை யையும் இல்லாதொழிப்பதற்கான சனநாயக வாயில்களைத் திறந்தன.

கிட்லர் எப்படிப் பாராளுமன்ற முறை மையைப் பயன்படுத்தியே சர்வாதிகார ஆ;ட்சி முறைமையைத் தோற்றுவித்தானோ அத்தகையதே அன்றைய ஜே. ஆர் ஜயவர்த்தானாவின் இந்த நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறைமை.

அந்த முறைமையின் முழு அளவிலான வெற்றியாக 2009 இலங்கை அரச அதிபரின் தேர்தல் முடிவுகள் இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் வாக்குத் தேவைகளின்றி சிங்களத் தலைமை அமையலாம் என்பதை நிறுவிஜே. ஆர். ஜயவர்த்தனா கண்டகனவை நனவாக்கியுள்ளது.

இந்த இலங்கை அரச அதிபர் தேர்தல் முறைமையில் இலங்கையை பல்லின பல்கலாச்சார நாடாக விளங்குவதற்கான தேவையில்லை என்பதை சிங்களப் பௌத்த பேரின வாதத்திற்கு எடுத்து ரைப் பதினாலேயே பௌத்த பிக்குகளே நேரடியாகத் தமிழ் பேசும் மக்களில் தங்கியில்லாத தலைமையை உருவாக்கக் கனவு கண்டோம் உருவாக்கி விட்டோம் எனமகிழ்ச்சி கொண்டாடுவதும் அல்லாமல் இஸ்லாமிய நூல்களை பள்ளிகளின் பாடத்திட்டங்களில் நின்று அகற்றுமாறும், ஒருநாடு ஒருசட்டம் ஒருதேசம் என்பது கொள்கையாகட்டும் எனறும் தேர்தல் வெற்றியை அடுத்துப் பேசியுள்ளமை இலங்கையின் அனைவருக்குமான வழி பாட்டு உரிமை என்னும் அடிப்படை மனிதஉரிமை மறுப்பாகவும் சர்வாதிகார முறைமையைத் தோற்று விப்பதற்கான அழைப்பாகவும் அமைகின்றன.

சில நாடுகளில் இருப்பது போல் பாராளுமன்ற சனநாயக ஆட்சிமுறை என்ற போர்வையுள் இராணுவ ஆட்சியொன்று இலங்கையில் தோற்றுவிக்கப்படாது தடுக்கும் உடனடித் தேவை ஐக்கியநாடுகள் சபைக்கு ஏற்பட்டுள்ளது.

**ஆசிரியர்**

உலகம் முழுவதும் எழுச்சியுடன்
உணர்வுபூர்வமாக நினைவு கூரப்பட்ட

# மாவீரர் நாள் 2019

## மாவீரர் நாள் படங்கள் - தாயகம்


வாகரை


நல்லூர்


முன்மாரிமுனை


மட்டு. பல்கலை


அய்யன்குளம்


மல்லாவி


யாழ். பல்கலை


கனகபுரம்


முழங்காவில்


தேராவில்


கோப்பாய்


மன்னார்


அளம்பில்

# தமிழின அடக்குமுறைகளுக்கு எதிராக மாணவர் சமூகம் என்றும் குரல் கொடுக்கும்

## யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய செயலாளர் பபிலராஜ்



தமிழின அடக்குமுறைகளுக்கு எதிராக குரல்கொடுக்கும் மாணவர் சக்தியை என்றைக்கும் யாராலும் அடக்க முடியாது என யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய செயலாளர் எஸ். பி. எஸ். பபிலராஜ் தெரிவித்துள்ளார்.

யாழ் பல்கலைக்கழகத்தில் வழமைபோன்று இம்முறை மாவீரர் நாள் நினைவேந்தலுக்கான ஏற்பாடுகள் இடம்பெற்றிருந்த நிலையில் பல்கலைக்கழக நிர்வாகத்தால் அனைத்து நிகழ்வுகளுக்கும் தடை விதிக்கப்பட்டதுடன் இரு நாட்கள் கற்றல் நடவடிக்கைகளும் நிறுத்தப்பட்டு மாணவர்கள் வெளியேற்றப்பட்டிருந்தனர். குறித்த விடயம் தொடர்பாக யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய செயலாளர் பபில்ராஜுடனான நேர்காணலின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கேள்விகளுக்கு பதிலளிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

**கேள்வி - மாவீரர் நாளையொட்டி பல்கலைக்கழக வளாகத்தினுள் மாணவர்களின் செயற்பாடுகள் மட்டுப்படுத்தமை பற்றி உங்கள் கருத்தென்ன?**

பதில் - கடந்த காலத்தில் குறிப்பாக 2015ற்கு முன்னரான காலப் பகுதியில் மாவீரர்களை நினைவுகூற வெளிப்படையாகவே தடைவிதிக்கப்பட்டு குறிப்பிட்ட மாவீரர் நினைவு வாரக் காலப்பகுதியினை உள்ளடக்கிய ஒரிரு வாரங்கள் பல்கலைக்கழகம் மூடப்பட்டு இராணுவத்தினரை பல்கலைக்கழக புறச் சூழலில் குவித்து முற்றுமுழுதாக இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் பல்கலைக்கழகம் இருக்கும். அன்றைய சூழல் 2015 உடன் மாற்றியமைக்கப்பட்டுள்ள நிலையில் தொடர்ச்சியாக இவ்வளவு காலமும் பல்கலைக்கழக வளாகத்தில் மட்டுமல்லாமல் தமிழர் தாயகம் முழுவதும் மக்கள் மாவீரர்களை நினைவுகூர்ந்து வந்த நிலையில் 2019ல் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தை தொடர்ந்து ஒரு வகையான பயப்பீதி மக்கள் மத்தியில் காணப்பட்டாலும் நினைவேந்தலிற்கு எந்த தடையும் விதிக்கப்படாத நிலையில் தாயகம் எங்கிலும் மற்றும் கிழக்கு பல்கலைக் கழகத்திலும் தடைகள் எதுவுமின்றி நினைவேந்தல் இடம்பெறும் நிலையில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலும் நினைவேந்தல் நிகழ்விற்கான ஏற்பாடுகள் இடம்பெற்றது. இருப்பினும் கடைசி நேரத்தில் தடை விதிக்கப்பட்டமையானது பல்கலைக்கழக நிர்வாகம் தம்மை தற்பாதுகாக்க மேற்கொண்ட முயற்சியே ஆகும்.
தம் உயிரிலும் மேலான தமிழினத்தின் மகத்தான இலட்சியப் பயணத்திற்காக மீளாத்துயில் கொள்ளும் மாவீரர்கள் மக்களின் மனங்களில் குடிகொள்வதால் தடைகள் போடுவதன் மூலமாக கட்டுப்படுத்திவிட முடியாது. மாவீரர்நாள் நினைவேந்தல் எப்போதாவது பல்கலைக்கழகத்தில் இடம்பெறாமல் இருந்ததும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**கேள்வி - இவ்வாறான பல்கலைக்கழக நிர்வாகத்தின் நடவடிக்கை சட்டபூர்வமானதா? இது மாணவர்களின் உரிமைகளை புறந்தள்ளுவதாக அமையாதா?**

பதில் - பல்கலைக்கழக நிர்வாகம் முன்னொரு போதும் இவ்வாறு தடை உத்தரவு பிறப்பித்ததில்லை. அது மாத்திரமன்றி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மாவீரர் நாள் நிகழ்வுகளினை பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளக் கூடாது என தடைவிதித்திருந்தால் கிழக்குப் பல்கலைக்கழகத்திலும் அல்லவா மாவீரர்நாள் நினைவேந்தலிற்கு தடைவிதிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இது பல்கலைக்கழக நிர்வாகம் சில அழுத்தங்களினால் தன்னிச்சையாக எடுத்த முடிவு ஆகும்.

மாணவர்களின் உரிமைகளை நசுக்கும் செயற்பாடு மட்டுமல்லாமல் இன்று வரைக்கும் தமிழின அடக்குமுறைகளிற்கு



எதிராக என்றைக்குமே முன்நிற்கும் பல்கலைக்கழக சமூகத்தின் செயற்பாடுகளை கட்டுப்படுத்த பல்கலைக்கழக நிர்வாகம் முயற்சி செய்வது ஒட்டுமொத்தமாக எமது இனத்திற்கான பயணப் பாதையில் இருந்து தடம்மாறிப் பயணிக்க முயல்கிறது. ஆனாலும் அதற்கு மாணவர் சக்தி ஒருபோதும் இடம் கொடுக்காது.

**கேள்வி- யாழ்ப்பாணத்தில் மாவீரர்களுகான கல்வெட்டுக்களை பல நாள் முன்னேற்பாடுகளூடாக செய்து விளம்பர நினைவு கூரலை ஒரு தரப்பினர் இம்முறை செய்ய, பல்கலைக்கழக மாணவர்கள் வருடந்தோறும் உணர்வெழுச்சசியுடன் வணக்கம் செலுத்தும் நடவடிக்கையை தடுக்க முனைந்தமை அரசியல்வாதிகளின் பின்புலத்தில் நகர்த்தப்பட்ட திட்டமிட்ட நடவடிக்கை என சிலர் கருதுகிறார்கள், இதுபற்றி மாணவர்கள் என்னகருத்தினை பகிர்ந்து கொண்டார்கள்?**

பதில் - நாம் மேலே குறிப்பிட்டது போன்றும் நீங்கள் குறிப்பிட்டது போலும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் மாத்திரம் தடை விதிக்கப்பட்டமை திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாக இருந்தாலும் அரசியல்வாதிகள் பின்புலத்தில் இருந்துள்ளார்களோ என்பது தொடர்பாக எம்மால் தெளிவாக குறிப்பிட முடியாது.

மாணவர்களைப் பொறுத்தவரையில் இது நிர்வாகம் திட்டமிட்டு தன்னைப் பாதுகாக்க மேற்கொண்ட முயற்சியாகவே நோக்கப்படுகிறது.

**கேள்வி- இவ்வாறான நடவடிக்கைகள் யாழ் பல்கலைக்கழக மாணவர்களின் தன்னெழுச்சியான சமூக தலைமைத்துவ முன்னெடுப்புக்களை தடுக்கும் என நினைக்கிறீர்களா?**

பதில்- மாணவர்களின் செயற்பாடுகளை இத்தகைய செயற்பாடுகள் மூலமாக முழுமையாக கட்டுப்படுத்த முடியும் என்றால் அன்றைய நாளில் நினைவேந்தல் இடம்பெறாமல் அல்லவா இருந்திருக்க வேண்டும். இத்தகைய செயற்பாடுகள் மூலமாக மாணவர்களின் பங்குபற்றலை குறைக்க தான் முடியுமே தவிர ஒட்டு மொத்தமாக தடுக்க முடியாது.

மாவீரர் நாள் நினைவேந்தல் என்பது சிங்கள மக்களிற்கு எதிரான ஒன்றாகவோ அல்லது அரசிற்கு எதிரான ஒன்றாகவோ நோக்கப்பட வேண்டிய ஒன்றல்ல. எமக்காக போராடி மடிந்தவர்களிற்கு அஞ்சலி செலுத்தும் ஓர் உணர்வு ரீதியான அம்சமாகும்.

**கேள்வி - கடந்த ஆறு மாதங்களின் முன்னர் யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய பிரதிநிதிகள் கைது செய்யப்பட்டமை அதன் பின்னர் தமிழ் கட்சிகளை ஒருங்கிணைக்க முன்னின்றமை, டிசம்பர் 26ம் திகதி தடை உத்தரவு, ஒன்றிய தலைமைகள் முனைப்புடன் பங்கு பற்ற முடியாமை என்பனவற்றை எவ்வாறு நோக்குகிறீர்கள்?**

பதில் - மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் ஏப்ரல் 21 தாக்குதலின் பின்னர் கைது செய்யப்பட்டமை மற்றும் இன்றைய தடை உத்தரவு அனைத்தும் மாணவர் ஒன்றியம் தமிழ்த் தேசியம் சார்ந்த செயற்பாடுகளில் பங்குகொள்வதை தடுக்கும் நோக்கிலான செயற்பாடுகள் ஆகும். கட்சிகளை ஒன்றினைக்க எடுத்த முயற்சி தொடர்பில் இதனோடு கூறுவது பொருத்தப்பாடாக அமையாது.

**கேள்வி - இன்றைய சூழலில் பல்கலைக்கழக மாணவர்கள் எவ்வாறு தம் சமூக முற்போக்கு மாதிரி தலைமை பண்பை வெளிப்படுத்த வேண்டும் என நினைக்கிறீர்கள்?**

பதில்- முன்னைய காலங்களைப் போன்று அண்மைக்கால பல்கலைக்கழக சமூகம் மாணவர்களிடத்தில் சமூகப் பொறுப் புணர்வுகளினை ஊட்டி வளப்படுத்தும் நிலை அருகிச் செல்லும் நிலைகாணப்படுகிறது. இன்றைய இளைஞர்களே நாளைய வழிகாட்டிகள் என்பதனை இன்றைய பல்கலைக்கழக மாணவர்களில் பலரும் உணர்ந்து கொண்டுள்ளார்கள். அத்தகைய நகர்வுகளை கூட்டாக முன்னெடுத்துச் செல்ல ஏனையவர்களும் ஒத்துழைத்துச் செயலாற்ற வேண்டும்.

# சர்வதேச மாற்றுத் திறனாளிகள் நாள் டிசம்பர் 3



தா.குகதாசன் உயிரிழை பயனாளி
மட்டக்களப்பு.

உடல் அல்லது உளம் அல்லது இரண்டிலும் ஏற்படும் பகுதியான குறைபாடுகள் உடையோர் ஆனால் திறன்கள் உள்ளோர் மாற்று வலுவுடயோர் ஆவர்.

**நகரும் வலு/ உடல் வலு பாதிப்புடையோர்**
**முள்ளந்தண்டு வட பாதிப்புடையோர்**
**மூளைப் பாதிப்புடையோர்**
**பார்வைப் புல பாதிப்புடையோர்.**
**கேட்டல் பாதிப்புடையோர்**
**கற்கும் திறன் பாதிப்புடையோர்**
**உளவியல் பாதிப்புடையோர்**
**வெளித் தெரியாத பாதிப்புடையோர்.**

என எட்டு வகைகளாக வகுக்கப்படுகின்றனர்.

நான் ஒரு இலங்கை குடிமகனாக இலங்கை மாற்றுவலுவுடையோர் பற்றியும் அதன் சட்ட உரிமைகள் பற்றியும் விரிவு படுத்துவது மேல்.

இலங்கையில் முதல்முறையாக 1996 ஆம் ஆண்டின் 28 இலக்க , அங்க்வீனமுற்றோர் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் 1996 ஒக்டோபர் மாதம் 24 ஆம் திகதி அத்தாட்சிப்படுத் தப்பட்டது.

அதனை தொடர்ந்து 1996ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 25 ஆம் திகதி தேசிய இலங்கை சனநாயக சோசலிசக்குடியர சின் வர்த்தமானிப் பத்திரிகையின் உத்தியபூர்வமாக வெளியிடப்பட் டது.

இலங்கை சட்டத்தின் பிரகாரம் 1996ம் ஆண்டு " 23" டில் மூன்று உரிமைகள் வழங்கப்பட்டது அதில் கல்வி, சமத்துவம், தொழில் வாய்ப்பு போன்ற விடையங்களாக கொண்டு வரப்பட்டது.

தற்போது நிகழ்கால நீரோட்டத்தில் பேசுபொருளாக மாற்று வலுவுடையோர் மாற்றம் பெற்றாலும். மனப் பாங்கினாலும், தேவைகளை அடைவதற்கு வேண்டிய தர அளவுகளை ஊனமுற்ற இலங்கைப் பெரும்பான்மையினருக்குச் சார்பாக வைத்திருப்பதனாலும் ஊன முற்றோருக்கு இயலாமையை ஏற்படுத்திக் கொண்டு அல்லது அதனைப் பேணிக்கொண்டு அவர்களை இயலாதவர்கள் என்று முத்திரை குத்தும் சமூகத்தின் பங்கு குறித்துக் கவனம் செலுத்த வேண்டிய தேவையை ஏற்படுத்துகிறது.

இந்த நோக்கு, மனித உரிமைகள் அல்லது ஊனத்துக்கான சமூக மாதிரி என்பதோடு தொடர்புடையது.

மாற்றுத் திறனாளிகளை உலகின் மிகப் பெரிய சிறுபான்மையினர் என்று குறிப்பிடுகிறது உலக சுகாதார நிறுவனம்.

இலங்கையில் இந்த மாற்றாற்ரல் உடைய ஒவ்வருவதும் கடுமையான அடிப்படை வசதிகளை பூர்த்தி செய்ய முடியாமல் இருப்பது வேதனையையும் விரக்தியையும் விளை வித்துள்ளது.

தமிழினத்தில் இந்த பாதிப்புக்களை நிவர்த்தி செய்வதற்கு அரசியல் பிரதிநிதிகள் முற்படுவது அரிதாகவே உள்ளது.

நாம் நமது புலம்பெயர்ந்து வெளி நாடுகளில் வாழும் எமது உறவுகளை நம்பியே வாழவேண்டிய நிலை திட்டமிடப்பட்ட விதமாக விடப்பட்டுள்ளது.

இலங்கையில் மாற்று வலுவுடையோரின் நிலை போராட்டமாகவே அமைகிறது. காலத்துக்கு காலம் பெயர்கள் மாற்றப்பட்டாலும் தனிமனிதர் சுதந்திரம் இன்னும் கேள்வியாகவே தொடர்கிறது. ஆரம்ப காலத்தில் ஊனமுற்றோர். அங்கவினமுற்றோர், வலு விழந்தோர், மாற்றுவலுவுடையோர், என பெயர்கள் வகுக்கப்பட்டாலும் தற்போது மாற்று திறனாளிகள் என பெருமையுடைய சொற்பதத்தில் அழைக்கப்படுகின்றனர்.

அவர்களுக்கான வசதிகள் அனைத்தும் மறுக்கப்படும் போது உதாசீனப்படுத்தப்படும் போதும் மற்றுத்திறனாளிகளின் வாழ்வும் வினாக்குறியாகவே காணமுடிகிறது.

கடந்த காலம் ஏற்பட்ட யுத்தம் பலவகையான மனிதர்களின் வாழ்வை சூறையாடி இன்று தமிழ் பிரதேசங்களில் அடிப்படை வசதிகள் அற்று வாழும் நபர்களின் வாழ்வானது போராட்டங்களாகவும் மரண நிகழ்வாகவும் நாளுக்கு நாள் நிகழ்வதனை அனைவரும் அறிவீர் ஆனால் அவர்களுக்கான பாதுகாப்பு சட்டம், சகமனிதர் சமத்துவம், தொழில் வாய்ப்பு போன்றவைகள் சட்டவடிவில் மாத்திரம் உள்ளதே தவிர அவர்களின் நடமுறை வாழ்வில் வரவில்லை என்பதே நிதர்சணமான உண்மை.

உலக வரலாறுகளில் பல மாற்றுத்திறனாளிகள் சாதித்தவை சாதனைகளாக பொதிக்கப்பட்ட போதிலும் இலங்கை மாற்றுத்திறனாளிகள் தங்களின் அடிப்படை அபிலாசைகளை கூட இன்றும் அடைய முடியாமல் இருப்பது மாற்று வலுவுடையோர்களில் எந்த அளவு ஊக்கம் கொடுக்கப்படுகிறது என்பதைக் காட்டுகிறது.

மாற்றாற்றல் உள்ள ஒவ்வொரு நபர்களும் சுயமாக இயங்கும் போது அவர்களுக்கான சுதந்திரம் மலரும். தொழில் பேட்டைகள், போக்குவரத்து வசதிகள் அனுகும் முறமைகள், அனுகும் வசதியுடைய பொது இடங்கள் என அடிப்படை தேவைகள் நிபர்த்தி செய்து கொடுக்கப்படுமாயின் சாதித்த சக உறவுகள் வரிசையில் ஏனையவர்களும் நிச்சயம் சாதிப்பார்கள் என்பதே உண்மை.



வருடா வருடம் வரவு செலவு கணக்கறிக்கைகள் கையாளுகிறார்கள். அதில் சுகதாரம், கல்வி, பாதுகாப்பு போன்ற பணிகளுக்காக செலவு செய்யப்படும் நிதியில் இருந்து மாற்றுத்திறனாளிகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்து அல்லது அரச சார்பற்ற அமைப்புக்களும் முன்வந்து மாகாணத்திற்கு ஒரு மாற்றாற்றல் உடைய வர்களுக்கான தொழில் வழங்கும் வதி விடங்கள் அமைக்கபடுமாயின் அதன் ஊடாக அவர்களது வாழ்வு சுபீட்சமாகும்.

இதனையே இந்த நாட்டின் குடிமக்களுக்கும் உலக மக்களுக்கும் மாற்று வலுவுடையவரின் சார்பில் கூற விரும்புகிறேன்.

ஆகவே மலர இருக்கும் புது ஆண்டில் கூட இவர்களது வாழ்வை நோக்கி நகருமாயின் மற்றுத்திறனாளிகளும் புதுமை செய்வார்கள் என்பதில் ஐயமில்லை.!

## உலகம் முழுவதும் எழுச்சியுடன் உணர்வுபூர்வமாக நினைவு கூரப்பட்ட

# மாவீரர் நாள் 2019

## மாவீரர் நாள் படங்கள் - தமிழகம்



மதுரை



புலியூர்


காஞ்சிபுரம்



சென்னை பல்கலை.


காஞ்சிபுரம்


மதுரை


முள்ளிவாய்க்கால் முற்றம்



முள்ளிவாய்க்கால் முற்றம்


முள்ளிவாய்க்கால் முற்றம்


புலியூர்


புலியூர்


சேலம்


புதுச்சேரி

# தமிழர் கடலும் தமிழர் அரசியலும்

முனைவர் விஜய் அசோகன்

இலங்கைத் தீவின் சிங்களப் பேரினவாத ஒற்றையாட்சியின் தலைமைக்கு சிங்கள மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள கோத்தபாயராஜபக்சேவின் வருகையினைத் தொடர்ந்து, தமிழர் 'தேசம்' தங்களின் அரசியல் பாதை பயணிக்க வேண்டிய திசை குறித்தான விவாதத்தினைத் தொடங்கும் முன்னரே, இந்திய ஒன்றியத்தினதும் சிங்களத் தரப்பினதும் சந்திப்புகளும் காய்நகர்த்தலும் பெருவீச்சில் பறக்கத் தொடங்கி விட்டன.

மறுபுறம், எவ்வித அரசியல் கணக்கீடுகளும் இன்றி, ராஜபக்சேக்கள் சீனாவின் சார்பானவர்கள், ஆதலால், இந்தியா தமிழர்கள் பக்கம் தடம் மாறுவர் என பழைய பல்லவிகள் 'சமரசவாதிகளால்' மீண்டும் வேர்விடத் தொடங்கி விட்டன.

இந்தியப் பெருங்கடலினை நோக்கின வருங்கால அரசியல், பொருளாதார, இராணுவ முடிச்சிகளில் தமிழர் தரப்பினை ஒரு பொருட்டாகமதிக்காத நிலை இருப்பது போல தோன்றினாலும், தமிழின அழிப்பிற்கான நீதியினை புறந்தள்ளி, தமிழர்தேச அரசியலினை மட்டுப்படுத்துதல் போன்றவைகளை காரணமாகவைத் தே சிங்களத்திடம் அனைத்து நாடுகளும் பேரம் பேசி தங்களுக்கு வேண்டியதை நிறைவேற்றியும் வருகிறார்கள் என்பதையும் நாம் கவனிக்கத் தவறுகிறோம்.

( இந்தியப் பெருங்கடல் என்று அழைக்கப்பட்டாலும் குமரியும் ஈழமும் தொடும் எம் தமிழரின் தொன்மை கடலினிலேயே நிகழ்கால பூகோள அரசியல் முடிச்சுகள் சுழல்வதால், இனி இக்கட்டுரை 'தமிழர்கடல்' என்னும் சொல்லோடே பயணிக்கும்)

2009-2015 காலக்கட்டத்தில் மீள்கட்டமைப்பு, மாகாணசபைதேர்தல், 1 3 ஆம் சட்டத்திருத்த அமலாக்குவது தொடர்பான பேச்சுவார்த்தைகள், 2 0 0 9 ற்கு பின்னரான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை கையாளுதல் என இந்திய ஒன்றியம் மகிந்த காலத்தில் தலையிட்டு வந்தாலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு- புலம் பெயர்ந்த அரசியல் அமைப்புகளை இணைந்த வாக்கில் கையகப்படுத்துதல், ஐ. நாமனித உரிமை அவைகளில் தீர்மான நாடகம், சிங்கப்பூர் கூட்டங்கள், மைத்திரி- ரணில் கூட்டுச் சதிகார அரசாங்க உருவாக்கம் என மேற்குலநாடுகள் அமெரிக்க ஐக்கிய அரசுகளின் 'கண்' அசைவில் வேறு விதமான காய்நகர்த்தலை மேற்கொண்டு வந்ததையும் நாம் அறிவோம்.

2009-2015 காலக்கட்டம் வரை தமிழர் அரசியல் பேச்சுப் பொருளாகவும் தமிழின அழிப்புக்கான' நீதி' விவாதப் பொருளாகவும் இருந்துவந்ததும், திடீரென்று 'நல்லாட்சி' நாடகத்தால் வீரியம் இழந்து, தேங்கித் தேங்கி ஊர்ந்துச் செல்லத் தொடங்கியதை நாம் மறந்து விடஇயலாது.

தமிழின அழிப்பிற்கான நீதியினை பேசும் உரிமை, தமிழர்கள் போராடிப் பெற்றிருந்த இறையாண்மை, தமிழீழ விடுதலைப்புலிகள் மீட்டுருவாக்கம் செய்திருந்த தமிழர் தாயகக் கோட்பாடுகள், தமிழர் தேசத்தின் அரசியல் தீர்வுகள் போன்ற எம்மிடம் இருந்த பலமிக்க பேரம் பேசும் சக்தியினை இந்திய ஒன்றியத் திடமும் மேற்குலக நாடுகளிடமும் 'அடமானம்' வைத்து விட்ட நிகழ்கால நிலையே, 2009-2015 காலக் கட்டத்தை விடவும், 2015-2019 காலக் கட்டத்தை விடவும், தமிழர் தரப்பில் இருக்கும் ஆகப் பெரும் நெருக்கடியையும் சேர்த்துக் கொண்டு வந்துள்ளது என்பதை கவனத்தில் கொள்வோம்.

மறுபுறம் இலங்கை- இந்திய ஒன்றிய கூட்டு எத்தகையதாக இருக்கிறது?

கோத்தபாயராஜபக்சே பதவி யேற்றதும், அடுத்த நாளிலேயே, இந்திய ஒன்றியத்தின் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் சந்திக்கிறார். முதல் வெளிநாட்டுப் பயணத்தினை இந்திய ஒன்றியத் தலைநகருக்கு அமைக்கிறார் கோத்தபாய. கடந்த ஆண்டு அக்டோபரில் மகிந்தராஜபக்சேவின் இந்திய ஒன்றியப் பயணமும், காங்கிரஸ் மற்றும் பாஜகதலைவர்கள் உள்ளிட்டோரைச் சந்தித்துவிட்டு, தொடர் பேட்டிகளை இந்திய ஊடகங்களில் (தமிழ், ஆங்கிலம் மற்றும் இந்தி) வழங்கியதும், வழக்கம் போல சுப்ரமணிய சுவாமியும் இந்து ராமும் ஆரத் தழுவி வரவேற்று 'சான்றிதழ்' வழங்கினார்கள் என்பதனையும் நினைவுப் படுத்திக் கொள்க.



மேற்குலச் செல்லப்பிள்ளைகளின் 'நல்லாட்சி' நாடக அரசாங்கத்தின் பின்னான இந்தோ-பசிபிக் பூகோள அரசியல் முடிச்சுகளில் இந்திய ஒன்றியத்தின் தேவையை உறுதிப்படுத்தியப்பின், மைத்திரி- ரணில்-ராஜபக்சே எவர்வரினும் இந்திய ஒன்றியத்துடனான 'நல்உறவு' தேவை என்ற புதிய கணக்குகளால், 2013ற்கு பிறகு இருந்த மகிந்தவுடனான இந்திய ஒன்றியத்தின் பிணக்குகள் மறைந்தே ஆகவேண்டியுள்ளது என்பதையும் பொருத்திப் பார்க்க வேண்டும்.

டெல்லி பயணத்தின் ஊடாக, 450 மில்லியன் டாலர் நிதி உதவியினைப் பெற்றுக் கொண்ட கோத்தபாய, சீனாவின் அம்பாந்தோட்டம் 99 வருட ஒப்பந்தத்தினை மாற்றியமைப்பது குறித்தசமிக்ஞையையும் வெளியிட்டு உள்ளார். சீனாவுடனான பேரத்தினை 'உரிய' முறையில் நிகழ்த்த அடுத்த ப்பயணமாக சீனாவிற்கும் செல்லவுள்ளார் கோத்தபாய.

2015 ஆம் ஆண்டு மே மாதம், கொழும்புவில் உள்ளதாஜ் கோரமண்டல் வளாகத்தில் நடந்த அரசியல் சந்திப் பொன்றில், ஐக்கிய அமெரிக்காஅரசுகளின் அரச செயலாளர் ஜான் கெர்ரி (Secretary of States, USA) அவர்கள் பேசியப் பேச்சில், பூகோள முக்கியத்துவம் வாய்ந்த இந்தத்தீவில் அமெரிக்க ஐக்கிய அரசுகள் மைத்திரி – ரணில் கூட்டாட்சியை ஆதரிப்பதோடு ( இணைப்பையும் ஆட்சி மாற்றத்தையும் திரைமறைவில் உருவாக்கியதும்), இந்தியப் பெருங் கடலிலும் அதற்கும் அப்பாற்பட்ட இந்தோ-பசிபிக் கடல் மண்டலத்திலும், அமெரிக்கா- இலங்கை அரசுகள் அரசியல்- பொருளாதார- இராணுவ நோக்கில் ஒன்றிணைவது அவசியம் என்று உரைத்திருந்தார்.

கொழும்பில் 2017இல், வியட்நாமில் 2018 இல் நடந்த 'இந்தியப் பெருங்கடல்' கருத்தரங்கில் இலங்கையின் பிரதமர் விக்கிரமசிங்கே, " இலங்கை, சீனாவுடன் பொருளாதார ஒப்பந்தங்களைத் தவிர வேறு எதனிலும் ஈடுபடாது, இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக எதனையுமே செய்ய மாட்டோம்" என்று தெரிவித்திருந்தார். ஆனால், அதே வேளை, தென் கிழக்கு ஆசியாவின் முதல் இராணுவக் கட்டளை மையம் இலங்கையிலேயே இருந்தது என்றும் அமெரிக்காவினது சிந்தனை ஒப்புதல் மீதான பாராட்டுக்களையும் குறிப்பிடத் தவறவில்லை.

இவைகளுக்கு அடுத்தடுத்தக்காட்சிகள் குறித்தும், தமிழர் கடலினில் நிகழ்ந்த 3 ஆண்டுகள் அரசியல், இராணுவ, பொருளாதார நடவடிக்கைகள் குறித்தும் இக்கட்டுரையாளர் எழுதிய " இந்தியப் பெருங்கடலும் அதன் அரசியல் பொருளாதார முக்கியத்துவம்" கட்டுரை விரிவாக பேசுகிறது.

கோத்தபாயவின் முதல் டெல்லி பயணத்தின் பொழுதான இந்திய ஒன்றியப் பிரதம அமைச்சர் மோடியுடனான சந்திப்பின் பின், வெளியான மோடியின் ஊடகச் செய்தியில், " இந்து சமுத்திர நன்மைக்கு இந்திய-இலங்கையின் கூட்டு முக்கியம்" எனத் தெரிவித்துள்ளார்.

இந்தோ- பசிபிக் பிராந்திய அரசியலில் இலங்கைத் தீவே ஆடு களத்தின் ஒய்வறை, அதற்கான பாதுகாப்புச் சக்தி இந்திய ஒன்றியமே ன்ற நிலையில், இந்திய-இலங்கை கூட்டு வலுவாகிறது என்பதே மேலே உள்ளச் செய்திகளின் வழியே நாம் புரிந்துக் கொள்ளும் செய்தியாக இருக்கிறது.

சீனாவுடன் எதிர் போக்கையும் இலங்கை கடைப் பிடிக்காது. போர்க்காலத்திலேயே மேற்குலகம், அமெரிக்க ஐக்கியஅரசுகள், இந்திய ஒன்றியம், சீனா, ஜப்பான் என அனைவரோடும் தன் 'இறையாண்மை' யின் பலம் கொண்டு அரசியல் சதுரங்கத்தை எல்லாப்பக்கமும் காய்நகர்த்தி விளையாடிய இலங்கையின் சிங்களப் பேரினவாதத்திற்கு, 2009ற்கு பிறகு பட்ட காயங்களையும் ஆற்றத் தெரிந்த 'ராஜபக்சே' க்களுக்கு நிகழ்கால இந்தோ-பசிபிக் பிராந்தியத்தின் இலங்கையின் பெரும்பலத்தினை வைத்து அரசியல் சதுரங்கம் விளையாடுவது இன்னும் எளிதே என்பதனையும் நினைவுப்படுத்திக் கொள்வோம்.!

2 0 1 5 அமெரிக்கா முதல் 2 0 1 9 மோடி வரை சொல்லும் செய்தியினை நாம் தொகுத்துப்பார்க்கும் பொழுது, தமிழர் கடல் இந்த அந்நிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எவ்வளவு முக்கியம் என்பதை உணரும் பொழுது, தமிழர்கள் தமிழர் கடலின் அரசியல் முடிச்சுகளில் முறையான காய்நகர்த்துவதும் எவ்வளவு முக்கியம் என்பதனைஉணரலாம்.

தமிழர் கடலின் அரசியல் முடிச்சுகளை நமக்கு சாதகமாக நாம் காய் நகர்த்த முனையும் முன் சில கோட்பாடுகளை நாம் வரையறுத்துக் கொண்டு விட்டுக் கொடுக்காத அரசியல் தலைமைகளை முன்னெடுக்கவைக்கவும் வேண்டும்.

1) தமிழர் தேசத்தின் இறையாண்மைக்கு எவ்வித இடர்பாடுகளும் நேரக்கூடாது.

2) தமிழர் தாயகத்தின் எல்லைகளும் கோட்பாடும் எவ்விதவிட்டுக் கொடுப்பிற்கும் இடம்தரக்கூடாது.

3) தமிழின அழிப்பிற்கான நீதியினை பெறும் இழப்பீட்டு இறையாண் மையினை தமிழர் தரப்பிற்கு உறுதி செய்தல்.

4) சிங்கள ஒற்றையாட்சி அரசியல மைப்பை களைவதும் புதிய அரசியலமைப்பிற்கு வழிவகைச் செய்தலும் முக்கியம், ஏற்கனவே இருக்கும் அரசியலமைப்பில் சட்டத்திருத்த நாடகத்தினை ஏற்காது இருத்தலும் அவசியம்.

**தொடர்ச்சி 10 ம் பக்கம்**

# இந்தியாவை நோக்கி நகரும் இலங்கை

# இலங்கையை நோக்கி நகரும் இந்தியா

**ஆய்வாளர் பற்றிமாகரன்**

இலங்கையின் புதிய ஜனாதிபதியாக கோத்தபாய இராஜபக்சா பதவியேற்றதுமே இந்தியா இலங்கையை நோக்கி நகர்ந்து தனது வெளிவிவகார அமைச்சரையே வாழ்த்துச் செய்தியுடன் இலங்கைக்கு அனுப்பி இலங்கையின் புதிய ஜனாதிபதியை அரச முறை விருந்தினராக அழைத்துக கொண்டது.

இந்த அழைப்புக் கிடைத்தவுடனேயே "நாங்கள் சீனாவுக்கு அம்பாந்தோட்டை துறைமுகத்தை 99 வருடக் குத்தகைக்குக் கொடுத்தது தவறு. இது குறித்து சீனாவுடன் மறு ஒப்பந்தம் குறித்துப் பேசவுள்ளோம். இந்தியாவுடைய நலனுக்கு எதிரான எதையுமே நாங்கள் செய்ய மாட்டோம்" என இந்தியப் பத்திரிகைக்கே செவ்வி அளித்து இந்தியாவை நோககி வேகமாக நகர்ந்து கொண்டது இலங்கை.

இலங்கையின் சீனாத் தூதுவர் கூட அம்பாந்தோட்டை துறைமுகம் இலங்கையின் இறைமைக்குள் உள்ளது. என்பதால் அது குறித்து அவர்கள் முடிவு செய்யலாம் எனக் கோத்தபாய அவர்களின சீனா ஒப்பந்தம் குறித்த கருத்துக்குப் பச்சைக் கொடி காட்டினார்.

இந்த மாற்றங்கள் ஏன் எதற்கு இவ்வளவு வேகமாக நடைபெறுகிறதென உலகெங்கும் கூர்மையாக நோக்கப்பட்டுக் கொண்டிருந்த சூழ்நிலையிலே, மூன்று நாள் அரச முறை விருந்தினராகச் சென்ற இலங்கை அரச அதிபருக்குச் செங்கம்பள வரவேற்பு. முப்படைகளின் மரியாதை, நாட்டின் ஜனாதிபதியும் பிரதமரும் கூடிநின்று வரவேற்பு, அரசமுறைக் கலந்து ரையாடல்கள், விருந்துபசாரங்கள் என அத்தனை அரச மரியாதைகளும் கொடுத்து மகிழ்ந்தது இந்தியா. இரு நாட்டுத் தலைவர்களும் இரு நாடுகளுக்கும் இடையிலான வரலாற்று சமுக கலாச்சார பொருளாதாரத் தொடர்புகளின் தொன்மையையும் தொடர்ச்சி யையும் மீளவும் மீட்டுப் பேசி மகிழ்ந்து கொண்டனர்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் இலங்கையின் அரச அதிபரர் கோட்ட பாய ராஜபக் சாவுக்கும் இடையில், இலங்கை யிலுள்ள தமிழ்ச் சமுதாயத்தினரின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்வது குறித்தும், பாதுகாப்பு மற்றும் வர்த்தக உறவுகளை மேம் படுத்துவது குறித்தும், மீனவர்கள் பிரச்சினைகள் குறித்தும் பேசப்பட்டதாகத் தகவல்கள் வெளியான போதிலும் தமிழர்களின் விருப்புக்களை பூர்த்தி செய்வது குறித்த பேச்சுக்கள் தொடர்பான விடயங்கள் எதுவும் இதுவரை வெளியிடப்படவில்லை.

இந்தியா, இலங்கைக்கு அதன் உட்கட்டுமான வளர்ச்சிகளுக்கு என 400 மில்லியன் அமெரிக்க டொலர்களையும், இலங்கையின ;பயங்கரவாதத்திற்கு எதிரான ஆற்றல்களைப் பலப்படுத்தவென 50 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் கடனாகக் கொடுத்துதவ முன்வந்துள்ளது என்பதே உறுதிப் படுத்தப்பட்ட செய்தியாக வெளிவந்துள்ளது.

இருநாட்டுத் தலைவர்களும் பத்திரிகை களுக்கு அளித்த தகவல்களின் அடிப்ப டையிலேயே இவர்களுக்கு இடையிலான பேச்சுவார்த்தையை விளங்கிக் கொள்ள வேண்டியதாக உள்ளது.



இந்தியா தான் வெற்றி பெற்றவுடன் உத்தியோக பூர்வ விஜயத்திற்கான விரைவான அழைப்பினை விடுத்தமைக்கு நன்றி தெரிவித்த இலங்கை அரச அதிபர் கோட்டபாய ராஜபக்சா "நானும் பிரதமர் மோடியும் பல முக்கிய விடயங்கள் குறித்து இன்று காலை பேசினோம். அவற்றுள் இரணடு நாடுகளதும் பாதுகாப்புக் குறித்த விடயமே முன்னுரிமை பெற்றது. இந்தியா எப்பொழுதும் சிறிலங்காவினுடைய புலனாய்வு மற்றும் பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளை மேம் படுத்துவதற்கு ஆதரவு அளித்து வந்துள்ளது. இதனைத் தொடர வேணடும். ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்கள் சிறிலங்காவை அதன் தேசிய பாதுகாப்புத் தந்திரோபாயங்களை மறுபரிசீலனை செய்ய வைத்துள்ள து. இதற்கு



இரு நாடுகளதும் தொடர்ச்சியான கூட்டுறவு தேவை. இந்தியப் பிரதமரின் உத்தரவாதங்கள் உற்சாக மூட்டுவதாக உள்ளன. இரு நாடுகளுமே இந்துமாக் கடல் பகுதியினை அமைதிப் பிரதேசமாக வைத்திருக்கவே விரும்புகின்றன. இலங்கையில் பிடித்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களை விடுவிக்க கொழும்பு நடவடிக்கைகள் எடுக்கும். ஒருநாடு மற்ற நாட்டை அதன் சுய மரியாதையுடன் மதித்தலும், பெறு மானங்களைப் பகிர்ந்து கொள்ளுதலும் இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்புக் கூட்டுறவைப் பலப்படுத்தும்" எனப் பத்திரிகைகளுக்குத் தெரிவித்ததாக இந்து ஆங்கிலப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தியப் பிரதமர் மோடி "இவ்வாண்டு ஈஸ்டர் தினத்தன்று சிறிலங்காவில் மனிதகுலத்தின் பன்முகத்தன்மைக்கும் பாரம் பரியமான கூட்டு வாழ்வுக்கும் மேல் கொடூரமான தாக்குதல் களைப் பயங்கரவாதிகள் நடாத்தினர். இந்தியத் தேர்தலை அடுத்து நான் இலங்கைக்குச் சென்று பயங்கர வாதிகளுக்கும் தீவிர வாதிகளுக்கும் எதிரான சிறி லங்காவின் போராட்டத்திற்கு இந்தியாவின் அசைக்க முடியாத ஆதரவை வெளிப்படுத்தினேன். இந்தியாவின் முக்கிய நிறுவ னங்களில் உள்ள சிறிலங்காவின் பொலிசார் ஏற்கனவே பயங்கர வாதத்திற்கு எதிரான பதில் நடவடிக்கைப் பயிற்சிகளின் ;பலன்களைப் பெற்றுள்ளனர். இலங்கையில் பலமான அரசு அமைவது இந்தியாவுக்கும் முக்கியம். வடக்கு கிழக்கில் உள்ளக இடப் பெயர்வு அடைந்த வர்களுக்கு இந்தியா 46000 வீடுகளைக் கட்டிக் கொடுக்கும் திட்டத்தைச் செயற்படுத்தி உள்ளது. அதே போல இந்திய வம்சாவழியினருக்கு மலைய கத்தில் 14000 வீடுகளை இந்தியா கட்டு; வதிலும் வெற்றிகரமான முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. முடிக்கப்பட்டுள்ளன." எனத் தெரிவித்தாகவும் இந்து ஆங்கிலப் பத்திரிகை செய்தி அளித்துள்ளது.

பலமான அரசு ((Strong State) ) என்பது அந்த அரசுக்கான மக்களின் பலமான ஆதரவிலும், அந்த அரசின் படைகளின் பலத்திலும் நோக்கப்படுகிற ஒன்று. சிங்களப் பெளத்த பேரினவாதம் தனது பலத்தை கோத்தபாயா அவர்களுக்கு முற்று முழுதாக வாக்களித்தது மூலம் வெளிப்படுத்திக் கொண்டது. தமிழ்பேசும் மக்கள் முற்று முழுதாக கோத்த பாயாவை எதிர்த்து வாக்களித்தமை என்பதை கோத்தபாயா உள்நாட்டில் தீர்க்க வேண்டும் என்னும் இந்தியா உட்பட்ட எல்லா வெளிநாடுகளும் வாக்குப் பலம் பெற்று பதவிக்கு வந்துள்ள புதிய அரச அதிபருக்கு படை பல மேம் பாட்டுக் குரியனவற்றைச் செய்து தங்கள் தங்கள் சந்தை நலன்களுக்கும் இராணுவ நலன்களுக்கும் புதிய அரச அதிபரை வளைத்துக் கொள்ள வேண்டும் என்பதே இன்றைய உலகின் வெளிவிவகாரக் கொள்கையாக உள்ளது. இதனா லேயே முதல் தூண்டிலாக 3150 கோடி இந்திய ரூபாக்கள் இலங்கைக்கு இந்தியா உடனே கொடுத்துள்ளது.

இதன் தொடர்ச்சியாக நாளை பாக்கிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் மக்தூம் ~h மஹ்மூத் குரோ~p வருகிறார். அவரும் பல கோடி உதவிகளை வழங்குவார் என எதிர் பார்க்கலாம்.

**தொடர்ச்சி 10 ம் பக்கம்**

# தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவை அவமதித்தது இந்திய மத்திய அரசு

தமிழக முன்னாள் முதல்வர் செல்வி ஜெயலலிதாவின் தீர்மானத்திற்கும், அந்த தீர்மானத்திற்கு தமிழக மக்கள் மற்றும் தமிழக சட்டசபை வழங்கிய ஆதரவுக்கும் எதிராக இந்திய மத்திய அரசு செயற்பட்டுள்ளதாக தமிழக மக்களும், அரசில் தலைவர்களும் கருதுவதாக எமது தமிழகச் செய்தியாளர் தெரிவித்துள்ளார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

சிறீலங்கா மீது இந்தியா பொருளாதாரத் தடைகளை விதிக்க வேண்டும், தமிழீழத் தனியரசு அமைவதன் மூலம் தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வை வழங்கவேண்டும் என்ற கருத்துக்கள் உள்ளிட்ட தீர்மானம் ஒன்றை தமிழக சட்டசபையில் முதல்வர் அவர்கள் 2013 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முன்வைத்ததுடன், அதனை தமிழக சட்டசபை ஒருமனதான அங்கீகரித்திருந்தது.



மேலும், சிறீலங்கா அரசிடம் சரணடைந்த சிறுவன் பாலச்சந்திரனை சரணடைந்த பின்னர் திட்டமிட்டு படுகொலை செய்தது போர்க்குற்றம் எனவும், அதற்கான ஆதராங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

அது மட்டுமல்லாது சிறீலங்கா அரசு மேற்கொண்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் அணைக்குழு கொண்டுவரும் தீர்மானங்களுக்கு இந்தியா ஆதரவுகளை வழங்க வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்திருந்தார்.

ஜெயலலிதாவின் இந்த தீர்மானம் மற்றும் கோரிக்கைகளைத் தொடர்ந்து அமெரிக்காவின் முன்னாள் வெளிவிவகாரச் செயலாளரும், முன்னர் அரச தலைவர் தேர்தலில் போட்டியிட்டவருமான கிலாரி கிளிங்டன் அவர்கள் தமிழகத்திற்கு நேரிடையாக வந்து முதல்வரைச் சந்தித்து சென்றிருந்தார்.

இந்த போர்க்குற்றங்களில் ஈடுபட்டவர்களில் முதன்மையானவர் தற்போதைய அரச தலைவர் கோத்தபாயா ராஜபக்சா என்பது உலகம் அறிந்தது. அவர் மீது பல வழக்குகள் உலக நாடுகளில் பதிவுசெய்யப்பட்டுள்ளதுடன், ஐ.நாவின் அறிக்கையும் பொதுமக்கள் கொல்லப்பட்டதையும், மனி உரிமைகள் மீறப்பட்டதையும் ஏற்றுக்கொண்டிருந்தது.

ஆனால் அவரை செங்கம்பளம் விரித்து வரவேற்ற இந்திய மத்திய அரசு 21 பீரங்கிக் குண்டுகள் முழங்க மரியாதைகள் செலுத்தி 450 மில்லியன் டொலர்களை கடனாக வழங்கி கௌரவித்துள்ளது என்பது ஒட்டுமொத்த தமிழ் இனத்தையும் இந்திய மத்திய அரசு மீண்டும் அவமதித்துள்ளதையே காட்டுகின்றது என தமிழக மக்களும் அரசியல் தலைவர்களும் கருதுகின்றனர்.

கோத்தபாயாவின் இந்தியப் பயணத்திற்கு எதிராக தமிழகத்தில் பல எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்பட்டபோதும் இந்திய மத்திய அரசு அதனை கருத்தில் எடுக்கவில்லை என்பது தமிழக மக்களையும், உலகம் எங்கும் பரந்துவாழும் தமிழ் மக்களையும் மிகுந்த கவலையடைய வைத்துள்ளது.

## 8ம் பக்க தொடர்ச்சி... தமிழர் கடலும்

5). சிதைவுற்ற நிலத்தின், சிதைவுற்ற மக்களின் வாழ்வு, பொருளாதாரம், தமிழர் நில இறையாண்மை உள்ளிட்டவைகளுக்கு நீதியினை முன்னிறுத்தும் அதே வேளையில் வல்லரசுகள் முன் மொழிய விடாது, தமிழர் தேச சிந்தனையில் இருந்து முன் மொழியும் கோட்பாடுகளை சர்வ தேசப் பேச்சுவார்த் தைகளுக்கு கொண்டு செல்லுதல்.

6). அரசியல் தீர்வுகளுக்கான எவ்வித கடப்பாடுகளும் பேச்சுவார்த்தைகளில் பங்கு பெறும் தமிழர் தரப்புப் பிரதிநிதிகள் முன்மொழிதல் கூடாது ஈழத்தமிழினத்தின் அரசியல் வேணவாவினை ஒட்டு மொத்த மக்களும் இணைந்தே வாக்குகள் மூலம் நிர்ணியக்க வழி வகை ஏற்படுத்துதல்.

7). கோத்தபாய ராஜபக்சேவுடன் இணைந்து செல்லு மாறும், பணிந்து செல்லு மாறும் சொல்லப்படும் சர்வதேச அழுத்தங்களை புறக்கணித்தல்.

8). சிங்கப்பூரிலும் லண்டனிலும் நடந்த ரகசிய சந்திப்புகளை சர்வதேச சமூகம் நடத்தாமல் வெளிப்படையான அரசியல் தீர்வுப் பேச்சுக்களை நடத்த முன் மொழிதல்.

9). முள்ளிவாய்க்கால் இனவழிப்புப் போருக்கு முன் தயாரிப்பிலும் பிந்தைய மட்டுப் படுத்தும் ஐ.நா மனித உரிமை அரசியலிலும் பங்குப் பெற்ற அமெரிக்கா சர்வ தேசப் பேச்சுவார்த்தைகளில் வெளிப் படையான நடு நிலைத்தன்மை வகித்தலுக்கு கோரிக்கை விடுத்தல்.

இப்படியான, இன்னும் மேம்ப டுத்தக்கூடிய கோட்பாடுகள் வரையறுத்து, உறுதிப் பட ஏற்றுக் கொண்ட பிரதிநிதிகள் மட்டுமே இந்திய ஒன்றிய, அமெரிக்க ஐக்கிய அரசுகள், மேற்குலக நாடுகளின் உடனான அரசியல் பேச்சுவார்த்தைக்குச் செல்ல வேண்டும். அத்தகையச் சூழலே, எமக்கான நகர்வினை மேம்படுத்தி, முன்னகர்த்தும்!

## 9ம் பக்க தொடர்ச்சி... இந்தியாவை

இதனை அடுத்து உலக நாடுகள் பலவும் வரிசையாக இலங்கைக்கு உதவுவர். இலங்கை அரச அதிபரும் இலங்கை பல்லின பல்கலாச்சார நாடு என்பதை எடுத்துரைக்கக் கூடிய பலவிதமான நம்பிக்கை மொழிகளைப் பேசுவார். ஆனால் அவரால் இலங்கையில் சிங்கள பௌத்த பேரினவாதத்தை வெல்ல முடியாது என்று அவருக்குத் தெளிவாகத் தெரியும் என்பதால் “ நான் பௌத்த சிங்கள வாக்குகளாலேயே வென்றேன்” எனவும் “ துட்டகை முனு சமாதி” யிலேயே பதவிப்பிரமாணம் செய்தேன் எனவும் அடித்துப் பேசாமல் இருகக் முடியாது. அதே வேளை சிங்கள பௌத்த பேரினவாதிகளின் செயல்களின் மனித உரிமை மீறல்கள் இன அழிப்புக்கள் கலாச்சார இன அழிப்புக்கள் என்ப னவற்றில் இருந்து அவர்களையும் தன்னையும் உலகத்திடம் இருந்து காப்பாற்றும் கவசமாக ஐக்கிய நாடுகள் சபையின் வழிகாட்டலை மறுத்தல் புதிய அதிபரின் நோக்காகவும் போக்காகவும் தொடரும். இதனால் உலகநாடுகள் மேற்கொள்ள கூடிய அழுத்தங்களைத் தடுப்பதற்கான கேடயமாகவே இன்றைய அரச அதிபர் கோத்தபாயாவுக்கு இந்தியா தேவையாகிறது. 2020 ஜெனிவா மனித உரிமைகள் அமர்வில் இதனைத் தெளிவாகக் காணலாம்.


## உலகம் முழுவதும் எழுச்சியுடன் உணர்வுபூர்வமாக நினைவு கூரப்பட்ட

# மாவீரர் நாள் 2019

## மாவீரர் நாள் படங்கள் - புலம்பெயர் சமூகம்


சுவிஸ்


பெல்ஜியம்


கனடா


கனடா


டென்மார்க்


பிரான்ஸ்


ஜெர்மனி


லண்டன்


லண்டன்


நோர்வே


நியூஸ்லாந்து


அமெரிக்கா


அவுஸ்திரேலியா

# வல்லாதிக்க போட்டியில் சிக்குண்டிருக்கும் சிறிலங்கா

## வேல்ஸ் இல் இருந்து அருஷ்

சீனாவுக்கு 99 ஆண்டுகள் என்ற ஒப்பந்தத்தில் அம்பாந் தோட்டைத் துறைமுகத்தை வழங்கியது தவறானது என தெரிவித் துள்ளார் சிறீலங்காவின் புதிய அரச தலைவர் கோத்தபயா ராஜபக்சா. முன்னைய அரசே இந்த தவறை செய்ததாகவும் அவர் குற்றம் சுமத்த தவறவில்லை, ஆனால் அவரது சகோதரர் மகிந்த ராஜபக்சா அரசே துறைமுக அபிவிருத்தியை சீனாவுக்கு வழங்கியது. ஆனால் சிறீலங்கா அரசால் நிதியை கட்டமுடியாது என்று உணர்ந்த ரணில் அரசு கடன் தொகையின் மீள்செலுத்தும் காலத்தை 99 ஆண்டுகளாக அதிகரித்தது.



அதனுடன் நின்றுவிடாது இந்தியாவை சமானதபடுத்தி அதன் ஊடாக மேற்குலகத்தின் பார்வையில் இருந்து தப்பிக்கும் முயற்சியையும் கோத்தபாய மேற்கொண்டுள்ளார். அதாவது 2009 ஆம் ஆண்டு போரின் போது இந்தியாவை முன் நிறுத்தி அனைத்துலகத்தின் பார்வையில் இருந்து தப்பித்த உத்தியையே கோத்தபாய தற்போது கையாண்டு வருகின்றார்.

எனவே தான் இந்தியாவுக்கு தனது முதல் பயணத்தை மேற்கொண்டுள்ளார். இந்திய வெளிவிவகார அமைச்சரின் சிறீலங்கா பயணத்தின் பின்னனியும் கோத்தபாயவின் மூலம் தனது பிராந்திய ஆதிக்கத்தை இந்தியா தக்கவைக்கும் முயற்சியாகும்.

கோத்தபயாவுக்கு அழுத்தங்களை கொடு க்கும் கருவியாக தமிழ் மக்களின் பிரச்சனைகளை முன்வைப்பதன் மூலம் தனது பிராந்திய ஆதிக்கக் கனவை நிறைவேற்ற இந்தியா முயன்றுவருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது தமிழகத்தில் ஒலிக்கும் எதிர்ப்பு அலைகளும், தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்று தெரிவிக்கும் இந்திய மத்திய அரசின் இராஜதந்திரிகளும், தொடர்ந்து அதனை கடைப்பிடிப்பார்களா என்பதை தான் தமிழ் இனம் உன்னிப்பாக அவதானிக்க வேண்டிய நேரம் இது.



உதாரணமாக சிறீலங்காவில் போர் உக்கிரமாக இடம்பெற்ற வேளை ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் அமைப்பில் அவசரமாக 2008 ஆம் ஆண்டு இணைந்து கொண்ட அமெரிக்கா சிறீலங்காவுக்கு எதிரான சாட்சியங்களை சேகரித்து எதிர்காலத்து சிறீலங்கா அரசுகளை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரத் தேவையான ஆதாரங்களை திரட்டிய பின்னர் அதில் இருந்து வெளி யேறியது போன்ற தொரு சூழ்நிலையை தான் தற்போதைய இந்திய அரசியல் கொண்டுவரலாம் என்ற எதிர்ப்பார்ப்பு தமிழ் மக்களிடம் உண்டு.

1980 களில் தமிழ் விடுதலை இயக்கங்களுக்கு பயிற்சி அளித்த இந்தியா, பயிற்சியின் பின்னர் போராளிகள் எந்த இலக்குகளை தாக்கப்போகின்றனர் மற்றும் யார் அந்த தாக்குதல்களில் பங்குபற்றப்போகின்றனர் என்ற விபரங்களை தமக்கு தரவேண்டும் என்ற நிபந்தனைகளை விதித்தபோதே உத்தரப்பிரதேசத்து பயிற்சிக் களத்தில் இருந்து வெளியேறிய விடுதலைப்புலிகளின் அணி தனக்கென ஒரு தனியான பயிற்சித் தளத்தை தமிழகத்தில் அமைத்துக் கொண்டது.

அதாவது இந்தியா ஈழத் தமிழ் மக்களின் பிரச்சனையை தனது பிராந்திய நலன்களை வலுப்படுத்திக் கொள்ளவே இதுவரை காலமும் பயன்படுத்தி வந்துள்ளது. ஆனால் தற்போதைய நிலையில் மேற்குலகத்தின் கையில் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் என்ற அஸ்திரம் உள்ளதால் தமிழ் மக்களின் பிரச்சனைக்குள் இந்தியா தன்னை அதிகம் திணிக்க முற்பட்டு நிற்கின்றது.

சீனாவின் ஆதிக்கத்தை முறியடிப்பதற்கு இந்தியா முற்படுகின்றது என்ற தோற்றப்பாடு இருந்தாலும், சீனா மற்றும் இந்தியா ஆகிய இரு பிராந்திய வல்லரசுகளின் நோக்கமும், பெரிய ண்ணாவின் (அமெரிக்கா) இந்துசமுத்திரப் பிராந்திய உள்நுளைவைத் தடுப்பது தான்.

எனவே தான கோத்தபாய ராஜபக்சாவுக்கு 21 பீரங்கி வேட்டுக்கள் முழங்க செங்கம்பள வரவேற்று அளித்துள்ள இந்தியா 450 மில்லியன் டொலர்ளையும் கடனாக வழங்கியுள்ளது. இந்தியாவால் வழங்கப்பட்ட இந்த நிதி அமெரிக்காவின் மிலேனியம் சலஞ் உடன்பாட்டில் சிறீலங்காவுக்கு வழங்கப்பட இருந்த நிதியின் அளவைக் கொண்டது என்பது இங்கு கவனிக்கத்தக்கது.

அது மட்டுமல்லாது சிறீலங்காவின் அபிவிருத்தியை முழுவதுமாக பொறுப் பேற்கவும் முன்வந்துள்ளது இந்தியா.

கோத்தபாயாவின் அரசியல் வரவு என்பது சிறீலங்காவின் பொருளாதாரத்தை ஆட்டம் காண வைக்கும் என்பதே சிறீலங்காவின் எதிர்காலம் தொடர்பான பலரது கணிப்பாக இருந்தது.

அதாவது மேற்குலகம் மீண்டும் ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகைகளை நிறுத் தலாம், முதலீடுகளைத் தவிர்க்கலாம். புலம்பெயர் தமிழ் சமூகம் தமது முதலீடுகளைத் தவிர்க்கலாம் என்ற அச்சங்கள் சிங்களவர்கள் மத்தியில் நிலவியபோதும், தமிழ் மக்கள் மீது கொண்ட பகை அவர்களை கோத்தாவின் பக்கம் திருப்பியிருந்தது.

ஆனால் சிங்கள மக்களின் அந்த அச்சத்தை போக்கியுள்ளது இந்தியா. ஆம் தனது பொருளாதாரம் இந்த காலாண்டு பகுதியில் எதிர்பார்த்த 6 விகிதத்தை எட்டாது 4.5 விகிதமாக வீழ்ச்சி கண்டபோதும், தனது 5 பில்லியன் டொலர் இலக்கை கைவிட்டு அதில் ஏறத்தாள 10 விகிதத்தை சிறீலங் காவுக்கு இந்தியா வழங்கியுள்ளது.

சீனாவும் இந்தியாவும் சிறீலங்காவை நெருக்கியுள்ள நிலையில் மேற்குலகத்தின் நிலைப்பாடு என்ன என்பது தான் தற் போதைய கேள்வி?

சிறீலங்காவிற்கும் மேற்குலகத்திற்கும் இடை யிலான உறவில் உள்ள விரிசலை மேலும் ஆழமாக்கும் நடவடிக்கையாக கொழும்பில் உள்ள சுவிஸ் தூதரகத்தில் நுளைவு அனுமதிப் பிரிவில் கடமையாற்றும் பெண் மீதான கடத்தல் முயற்சி விவகாரம் அமைந்துள்ளது.

சிறீலங்கா அரச தலைவர் கோத்தபாய ராஜபக்சா பாதுகாப்புச் செயலாளராக இருந்த போது மேற்கொண்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற் கொண்டவரும் முக்கிய ஆவணங்களை வைத்திருக்கலாம் எனக் கருதப் படுபவருமான சிறீலங்கா குற்றப் புலனாய்வுத்துறை அதிகாரி நிசந்தா சில்வா சுவிற்சலாந்தில் அரசியல் தஞ்சம் கோரியுள்ளது சிறீலங்கா அரசை அச்சமடைய வைத்துள்ளது.

அரச தலைவர் தேர்தல் முடிவுகள் வெளிவருவதற்கு முன்னர் அவர் சுவிஸ் தூதரகத்தில் நுளைவு அனுமதியை பெற்று வைத்திருந்தாரா என்பதே சிறீலங்கா அரசின் தற்போதைய கேள்வி. எனவே தான் நுளைவு அனுமதிப் பிரிவில் பணியாற்றும் பெண்ணை கடத்தும் முயற்சிகள் மேற்க கொள்ளப்பட்டுள்ளன.

ஆனால் சிறீலங்கா அரசின் இந்த முயற்சிகள் அனைத்துலக மட்டத்தில் குறிப்பாக மேற்குலக இராஜதந்திர மட்டங்களிலும், ஊடகங்களிலும் அதிக கவனத்தைப் பெற்றுள்ளது ஒருபுறம் இருக்க சிறீ லங்காவில் இருந்து வெளியேறும் அதிகாரிகளுக்கு புகலிடத்தஞ்சம் கொடுத்து அவர்களை வரவேற்பதில் ஐரோப்பிய நாடுகள் ஆர்வம் காட்டுவதும் சிறீலங்காவின் தற்போதைய அரசுக்கு சாதகமானதல்ல.

# கோத்தபாயாவுக்கு எதிரான வழக்கை தள்ளி வைப்பேனே தவிர கைவிட மாட்டேன்



தமிழ் மக்களுக்கு எதிராக இலங்கை அரசு மேற்கொண்டு வரும் மனித உரிமை மீறல்களில் பாதிக்கப்பட்டவர்களில் றோய் சமாதானம் அவர்களும் ஒருவர். அவர் சிறீலங்கா அரசுக்கும் கோத்தபயா ராஜபக்சாவுக்கும் எதிராக 2019 ஆம் ஆண்டு அமெரிக்காவில் வழக்கை தாக்கல் செய்து நடத்தி வருகின்றார்.

ஆனால் இலங்கையின் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் தற்போது அரச தலைவராக வெற்றி பெற்றுள்ளார். இந்த நிலையில் இலக்கு மின்னிதழ் மற்றும் இணையத்தளம் திரு சமாதானம் அவர்களிடம் ஒரு சிறப்பு நேர்காணலை மேற்கொண்டிருந்தது.

ஜெனீவா ஐ.நா.சபையில் யில் இலங்கை அரசிற்கு எதிராக வழக்கு தொடுத்து அதில் வெற்றி பெற்ற கனடாவில் வசிக்கும் றோய் சமாதானம் அவர்கள் வழங்கிய சிறப்பு பேட்டி.

**கேள்வி 1. சிறீலங்கா அரசு உங்கள் மீது மேற் கொண்ட மனித உரிமை மீறல்களுக்கு எதிராக நீங்கள் ஐக்கிய நாடுகள் சபையில் தொடுத் திருந்த வழக்கு தற்போது என்ன நிலையில் உள்ளது?**

பதில்: ஐ.நா வில் 2013இல் தாக்கல் செய்யப் பட்ட வழக்கில், இலங்கை அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். என்ற தீர்ப்பு வழங்கப்பட்டது. தீர்ப்பு ஒன்று சொல்லலாமே தவிர அதை செயற்படுத்த முடியாது. அவ்வழக்கில், எனக்கு சன்மானம் வழங்கப்பட வேண்டும். குற்றம் புரிந்த வர்களை கைது செய்ய வேண்டும் என்பது போன்ற பத்துக் கோரிக்கைகள் அந்த வழக்கில் இடம்பெற்றிருந்தது. எனக்கு சாதகமாக தீர்ப்பு 2016 ஆம் ஆண்டு வழங்கப்பட்டது. ஆறு மாதத்திற்குள் சிறீலங்கா அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கூறப்பட்டது. தீர்ப்பின் பின்னர் எதுவும் நடைபெறவில்லை. தீர்ப்பை நடைமுறைப்படுத்துவதற்கான பொறிமுறை ஐநாவிடம் இல்லை.அவர்கள் வழங்கிய தீர்ப்பு தீர்ப்புத் தான். அதில் எந்த மாற்றமும் இல்லை.



தமிழ் மக்களுக்கு எதிராக இலங்கை அரசு மேற்கொண்டு வரும் மனித உரிமை மீறல்களில் பாதிக்கப்பட்டவர்களில் ஒருவரான

**றோய் சமாதானம்**
நேர்காணல்

**கேள்வி 2. நீங்கள் தொடுத்த வழக்கினால் சிறீல ங்காவின் தற்போதைய அரச தலைவரின் வெளிநாட்டுப் பயணங்களுக்கு தடை ஏற்பட வாய்ப்புக்கள் உண்டா?**

பதில்: பயணத் தடை என்னும்போது, எனது வழக்கு தொடர்புபட்ட ஒருவருக்கும் நுளைவு அனுமதி வழங்கப்பட மாட்டாது. அதில் எந்த மாற்றமும் இல்லை. உதாரணமாக என்னுடையது அல்லாமல் வேறு ஒருவரை எடுத்துக் கொண்டால், நாமல் ராஜபக்ஸவை எடுத்துக் கொண்டால் அவருக்கு அமெரிக்காவோ, கனடாவோ, ஜேர்மனியோ, ஐக்கிய இராச்சியமோ விசா வழங்காது என எண்ணுகிறேன்.

சிங்கப்பூர், துபாய் போன்ற நாடுகளுக்கு செல்லலாமே தவிர, வேறு நாடுகளுக்கு செல்ல முடியாது. அப்படி ஒரு பட்டியல் இருக்கின்றது. என்னுடைய வழக்கு தொடர்புபட்ட காவல்துறை அதிகாரிகள் தொடக்கம் மேலும் பல அதிகாரிகளின் பெயர் விபரங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளது. அதனால் எந்த ஒரு தூதரகமும் கொழும்பில் நுளைவு அனுமதி வழங்காது. இது என்னுடைய வழக்கினால் நடந்த ஒரு முக்கியமான விடயம். எந்த ஒரு நாடும் அதாவது கனடா, அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம் உட்பட இடைத்தங்கல் விசா கூட குற்றம் சுமத்தப்பட்டவர்களுக்கு வழங்காது.

**கேள்வி 3. மானிடத்துக்கெதிராக குற்றச் சாட் டப்பட்டுள்ள கோத்தபாய ராஜபக்ச இன்று சனாதிபதியாகி விட்டார். இந்தக் கால மாற்றத்தை எப்படிப் பார்க்கின்றீர்கள்? இனி நீங்கள் தாக்கல் செய்த வழக்குற்கு என்ன நடக்கும்?**

பதில்: இந்த வழக்கின் விபரத்தைச் கூறுகிறேன். லசந்த விக்கிரமதுங்கவின் மகள் மேற்கொண்ட வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. என்னுடைய வழக்கு தள்ளுபடியாகவில்லை. என்னுடைய வழக்கிற்கு தற்காலிக ஒத்திவைப்பு முறை உள்ளது. ஆனால் நான் தற்காலிக ஒத்திவைப்பு மேற் கொண்டாலும் கூட கோத்தபயா ராஜபக்ஸவின் வழக் கறிஞர்கள் விதிவிலக்கு (Immunity) பெற முடியும். இது உலகத் தலைவர்களை பாதுகாக்கும் அடிப்படை விதி. அப்படி இருக்கும் போது, தற்காலிக ஒத்திவைப்பு முறைக்கு எதிராக அவர்கள் வழக்கு பதிவுசெய்யக்கூடும். அப்படி நடந்தால் எனது வழக்கும் தள்ளுபடியாகும். ஒரு வழக்கு அமெரிக்காவில் தள்ளுபடியாகினால், நான் எப்போதும் எக்காரணம் கொண்டும் அவருக்கு எதிராக எந்த ஒரு வழக்கும் பதிவுசெய்ய முடியாது. எனவே நாங்கள் அவருக்கெதிரான வழக்கை இனிமேல்தான் பதிவு செய்யப் போவதாக, தெரிவிக்க இருக் கின்றோம். ஏனெனில், லசந்த விக்கி ரமதுங்கவின் மகளின் வழக்கு தள்ளுபடியாகி விட்டது. அவர் இனி மேல்முறையீட்டு நீதிமன்றிற்கு போனால்கூட ஒன்றும் செய்ய முடியாது. கீழ் நீதிமன்றில் அளித்த தீர்ப்பே அங்கும் வழங்கப்படும். அவர் இனி அமெரிக்காவில் வழக்கு தாக்கல் செய்ய முடியாது.

எங்கள் வழக்கும், ஜனாதிபதிக்கு எதிராக இருப்பதால், நீதிபதி அதனை தள்ளுபடி செய்யும் சந்தர்ப்பங்கள் உண்டு. ஆனால் இன்னும் அது இடம்பெறவில்லை. டிசம்பர் 15, 16 திகதியளவில் இந்த வழக்கை நாங்கள் தற்காலிகமாக நிறுத்தி வைக்க உள்ளதாக எங்கள் சட்டத்தரணி தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் ஊடகங்களுக்கு அறிவி க்கவுள்ளனர். நீதிபதி எங்களை வழக்கை நிறுத்தும்படி கூறவில்லை. ஆனால் நாங்கள் தற்காலிகமாக நிறுத்துகின்றோம். அப்படி அறிவிக்காது போனால் எமது வழக்கு தள்ளுபடி செய்யும் பட்சத்தில் நாம் அவருக்கு எதிராக அமெரிக்காவில் எந்த ஒரு சிவில் வழக்கையும் போட முடியாது.

**கேள்வி 4. கோத்தபாய ராஜபக்சா தனது அமெ ரிக்க குடியுரிமையை இழந்து விட்டதாக தெரிவித்துள்ளார். அவ்வாறு அவர் அமெரிக்க குடியுரிமையை இழந்தாலும் அவருக்கு எதிராக நீங்கள் இந்த வழக்கை நடத்த முடியுமா அல்லது நீதியை பெறமுடியுமா?**

பதில்: குடியுரிமை தொடர்பாக எந்தப் பிரச்சினையும் இல்லை. அவரின் மனைவி, மகன் எல்லோரும் அமெரிக்கப் பிரஜைகள் தான். அவர் ஜனாதிபதி பதவியிலிருந்து விலகிய பின் எப்போது அவர் அமெரிக்கா வருகின்றாரோ அப்போது வழக்கை பதிவுசெய்யலாம். வழக்குத் தொடரப்பட்டால் அதன் பின் எந்த சிக்கலும் இல்லை. நாங்கள் அதற்கான ஒழுங்குகளை செய்து வைத்துள்ளோம். பிரச்சினை என்னவெனில், அவர் ஜனாதிபதியாக இருக்கின்றார் என்பதால், சர்வதேச சட்டத்தின்படி அவருக்கு எதிராக ஒன்றும் செய்ய முடியாது. ஐந்து வருடங்களோ, பத்து வருடங்களோ எவ்வளவு காலம் ஜனாதிபதியாக இருக்கின்றாரோ, நான் அவருக்கெதிராக ஒன்றும் செய்ய முடியாது. அவர் எப்போது பதவியில் இருந்து விலகி பொதுமகனாக வருகின்றாரோ அப்போது தான் நான் இந்த வழக்கைத் தொடரலாம். இதுதான் யதார்த்தம்.

அதேநேரம் எனது மனைவியின் தாயும், தகப்பனாரும் 16ஆம் திகதி நாட்டை விட்டு வெளியேறி விட்டனர். அவர்கள் இப்போது நாட்டில் இல்லை. ஏனெனில் அவர்களுக்கு தொடர்ந்து அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுக் கொண்டிருந்தன. அதனால் சட்டத்தரணியின் அறிவுறுத்தலுக்கு அமைய நான் அவர்களை இலங்கையிலிருந்து வெளியேற்றி விட்டேன். அதேநேரம் எனது மனைவியின் சகோத ரர்களுக்கும் அச்சுறுத்தல் உள்ளது. உங்களுக்கே தெரியும் குற்றப்புலனாய்வுத் துறையைச் சேர்ந்த நிசாந்த என்ற காவல்த்துறை அதிகாரியே வெளியேறி விட்டார். அவருக்கே இந்த நிலைமை என்றால் எனக்கு அதிக நேரம் எடுக்காது.

**மிகுதி அடுத்த இதழில் தொடரும்......**

# எயிட்ஸ் எமக்கு ஒரு பாடம்


விக்கிரமன்



அகச்சூழல், புறச்சூழல் மற்றும் நோய்க் காரணி என்பவற்றின் இடைத்தாக்கத்தின் விளைவாக தொற்று நோய்கள் தோன்றுகின்றன என்பது நோயியல் சமன்பாட்டின் அடிப்படையாகும். அவ்வகையில் பல்வேறு நோய்க்காரணிகள் அல்லது நுண்ணுயிர்கள் காலத்துக்கு காலம் மனிதகுலத்திற்கு பெரும் பாதிப்பு களை ஏற்படுத்தி வருகின்றன. இவற்றில் பக்டீரியாக் களும், வைரசுக்களும் உலகளாவிய அதியுச்ச இழப்புகளை மனிதருக்கு ஏற்படுத்தி கொண்டே இருக்கின்றன.

இவற்றுள் கொள்ளை நோய் (பிளேக்), ஸ்பானியகாய்ச்சல், சின்னம்மை என்பன பதிமூன்று முதல் 19ம் நூற்றாண்டு வரை ஒரு பில்லியனுக்கு அதிகமான மனிதர்களின் உயிரிழப்புக்கு காரணமாக அமைந்தன. எனினும் சமூக பொருளாதார, மருத்துவ விஞ்ஞான வளர்ச்சி இவ் வகை நோய்களை முற்றாக இல்லா தொழிக்கவழிவகுத்தது.

ஆனால் காசநோய் மற்றும் மலேரியா என்பன பல்லாயிரம் வருடங்களுக்கு மேலாக மனித குலத்திடையே தாக்கம் செலுத்தி வருவதுடன், கொலரா நோய் பதினாறாம் நூற்றாண்டு முதல் தாக்கம் செலுத்தி வருகிறது. இந் நோய்களும் ஏறத்தாழ ஒரு பில்லியன் உயிர்களை காவு கொண்டிருக்கும் என கணிப்பிடப்படுகிறது எனினும் மருத்துவ விஞ்ஞானம் இந் நோய்களின் தாக்கத்திலும் மனித பேரழிவிலுமிருந்து காத்து வருகிறது. இந்நிலையில் பத்தொன் பதாம் நூற்றாண்டின் பிரதான உலகளாவிய நோயாக எயிட்ஸ் அல்லது வலிந்து பெறப்படும் நோயெதிர்ப்பு குறைபாட்டு நோய் *(acquired immunodeficiency syndrome (AIDS))* நோயே விளங்கி வருகிறது.



மனித நோயெதிர்ப்பு குறைபாட்டு வைரசின்( *Human Immuno deficiency virus /HIV* )தாக்கமும் அதன் வெளிப்பாடான எய்ட்ஸ் 1 9 ம் நூற்றாண்டு (1981) முதல் அதிக பரம்பலையும் உயிரிழப்புகளையும் ஏற்படுத்தும் கொடிய நோயாகவும் இன்றளவும் திகழ்ந்து வருகிறது. இதனால் முப்பத்தெட்டு ஆண்டுகளில் எழுபத்தைந்து மில்லியன் மக்கள் பாதிக்கப்பட்டும் அவர்களில் முப்பத்தி யிரண்டு மில்லியன் உயிர்கள்காவு கொள்ள பட்டுள்ளதாக கணக்கிடப்படுகிறது.

மேலும் முப்பத் தெட்டு மில்லியன் மக்கள் மனித நோயெதிர்ப்பு குறைபாட்டு வைரசின் ( H I V ) தாக்கத்திற்கு உள்ளாகி வாழ்ந்து வருகின்றனர் என மதிப்பிடப் படுகிறது. இவர்களில் 49.6% பெண்கள், 45.9% ஆண்கள், 4.5% சிறுவர்கள்.

இந்நோயுடையோர் 5 6 . 5 % அபிரிக்க நாடு களிலும், 11.5% இந்தியாவிலும், 3% இந்தோனே சியாவிலும் ஏனைய 2 9 % போன்ற நாடுக ளிலும், அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளிலும் வாழுகின்றனர். நவீன உலகில் எப்படி இவ் வாறான ஒரு நோய் மனிதர்களுக்கு பேரிழப்பை ஏற்படுத்தியது? அந்நோய் பரம் பலடையும் முறையென்ன அதனை எதிர் கொள்ள எவ்வாறான உத்திகள் பயன் படுத்தபடுகின்றன என்பன நோயியலையும் மீறி இயற்கையின் வாழ்க்கை தத்து வங்களை எமக்கு உணர்த்தி நிற்பதாகவும் நாம் கொள்ளலாம்.

**நோய்த் தொற்றும், நுண்ணு யிரியலும் , நோயி யலும்:**

எய்ட்ஸை உருவாக்கும் வைரசுக்கள் தொற்று ஏற்பட்ட ஒரு மனிதன் அல்லது விலங்கிலிருந்து இன்னொரு மனிதனுக்கு மனித உடல் கலங்களினூடனான நேரடித் தொடர்பினூடே தொற்றுகிறது. இவ்வாறான பரவல் பல்லின மற்றும் தன்னின பாலியல் உடலுறவின் போதே பெருமளவில் ஏற்ப டுகின்றன, எனினும் குருதி பாச்சல், தாயிடமிருந்து சேய்க்கான குருதி தொடர்பு மூலமும், ஊசி மூலமான போதைப் பொருள் பாவனை, மருத்து வஉபகரணங்கள், சவரம் செய்யுமிடங்கள் போன்ற உடல் கலங்களில் உரசல்களை ஏற்படுத்த கூடியமறை முகத் தொடர்பினூடாகவும் பரவுகின்றன.

இவ்வாறு பரவும் வைரசு பின்பு உடற் பாயங்களினூடே பிற மனிதர்களுக்கு தொற்றுகிறது. இச் செயற்பாட்டின் போது நிணநீர்க்குளியங்களின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டு அவற்றிலிருந்து உருவாகும் பிற பொருள்களை வேறு பிரித்தறியும் புரதக்கூட்டு *(cluster of differentiation 4 (CD4))* தொகுப்பும் தடுக்கப்படுகிறது. இதனால் உடலின் நோயெதிர்ப்பு சக்தி வெகுவாககுறைந்து பிற தொற்றுக்களுக்கும் அவற்றின் தொடர் விளைவுகளுக்கும் வழிவகுக்கிறது. இப்போது வலிமை குறைந்த நுண்ணுயிர்கள் கூட உடலில் பெரும்தாக்கத்தை ஏற்படுத்தி தொற்று ஏற்பட்டவரை நலிவடையச்செய்யும்.

**எய்ட்ஸ் கட்டுப்பாட்டு செயற் பொறி முறைகள்:**

01. எய்ட்ஸ் நோய் தாக்கத்துக்கு உள்ளாககூடிய வாய்ப்புள்ள அனை வரையும் மருத்துவ பரி சோதனைக்கு உட்படுத்தி நோய் தொற்றை ஆரம்பத்திலேயே இனங்காணல்.

02. மருத்துவ விஞ்ஞான மேம்பாட்டினால் கண்டு பிடிக்கபட்டுள்ள எய்ட்ஸ் வைரசு தாக்கத்தை மட்டுப்படுத்தும் மருந்துகள் மூலமான சிகிச்சை பெறும் வாய்ப்பினை அனைவருக்கும் ஏற்ப டுத்துதல்.

03. மனித நோயெதிர்ப்பு குறைபாட்டு வைரசின் (H I V ) தாக்கத்திற்கு உள்ளாக கூடியவர்களுக்கான விழிப்புணர்வு மூலம் நோய் பரவு வதை தடுப்பதற்கான முறைகளை பரப்பு தலும் அவர்களின் வலுவை மேம் படுத்தலும் (குறிப்பாக பெண்கள்)

04. எதிர்பார்க்கப்படும் அளவுக்கதிகமாக நோய் தாக்கம் ஏற்படும் சமூக குழுக்களை இனங்கண்டு உடனடி மருத்துவ ஆய்வு, சிகிச்சை மற்றும், தடுப்பு நடவடிக்கைகளை மேற் கொள்ளல்.

மேற்படி பிரதான செயற்றிட்ட இலக்கு களுடன் உலகெங்கும் உள்ள எய்ட்ஸ் பாதிப்புக் குள்ளாகும் வாய்ப்புள்ள மக்களை இனங்கண்டு உரிய செயற்பாடுகளை மேற்கொள்ளும் போது எயிட்ஸ் நோயின் தாக்கத்தை மட்டுப்படுத்த முடியும். அவ்வகையில் புதிய அணுகு முறைகள் குறைந்தது பத்தொன்பது மில்லியன் மக்களுக்கு கிடைக்கப் பெற்றி ருப்பதுடன் ஒன்பது மில்லியன் உயிர்களை காத்திருக்கிறதென கணக்கிட பட்டுள்ளது. இவ்வாறான தொடர் செயற்பாடுகள் 2030 ஆண்டளவில் 40 மில்லியன் உயிர்களை காப்பித்துாடாக 4 டிரில்லியன் பணசேமிப்பை உலகுக்கு ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப் படுகிறது.

மேற்படி செயற்றிட்டங்கள் உரிய வகையில் கிடைக்க மக்கள் எய்ட்ஸ் தொடர்பாக அறிந்து கொள்ளவும், தமது தேர்வை தாமே செய்யவும், பாதிப்புகளில் இருந்து தடையின்றி மீண்டு வரவும் தம் தேவைகளை வலியுறுத்தி பெற்றுக் கொள்ளவும் வலுவூட்டப்பட வேண்டும் என ஐக்கிய நாடுகள் அவையின் எயிட்ஸுக்கான செயற்றிட்டம் தனது ௩௦வது ஆண்டு உலக எய்ட்ஸ் தினத்திற்கான அறை கூவலில் தெரிவித்துள்ளது.

எய்ட்ஸ் நோய் உடலை தாக்கும் பொறி முறை, அதனை தடுக்கவும் அதன் தாக்கத்தை குறைக்கவும் நாம் பிரயோகிக்கும் செயற்றிட்டங்கள் மற்றும் அதன் விளைவுகள் என்பன மனிதருக்கிடையே இன்று நிலவும் ஆதிக்கப் போட்டிகளும் அவற்றின் தாக்கங்களுக்கும் ஒப்பானதாக கொள்ள முடியும். இங்கு ஆதிக்க சக்திகள் வைரசை போல கவர்ச்சிகரமான வாக்குறுதிகளுடன் மக்களை கொள்ளை கொண்டு மக்களின் வளங்களை சுரண்டி அவர்களை நலிவடையச் செய்து ஒரு பிரதேசத்தில் இருந்து இன்னொன்றுக்கு பரவிய வண்ணம் உள்ளன. அதனை எதிர் கொள்வதற்கு, அச்சக்திகளின் கபடத்தனத்தை இனங்காணல், உடனடி உள்ளக பரிகாரம் தேடல், தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் சமூக வலுவூட்டல் என்பன இன்றைய தேவையாக உள்ளது என்பது எய்ட்ஸ் எமக்கு கற்றுத் தரும் பாடமாக உள்ளது.